விலை ரூபா 1-00

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 23-1-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 17

எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழென்று
சங்கே முழங்கு!

--- பாரதிதாசன்

UNIVERSITY OF SRI LANKA ... RECEIVED 1981-7-26 PERIODICALS DIVISION ... LIBRARY

## யாழ்ப்பாண குடாநாட்டில்.....

# அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்படும்?

### அரசு சார்பு நாள் இதழ் கட்டியம் கூறுகிறது!

யாழ் - குடாநாட்டில் மீண்டும் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவதா என்பதுபற்றி அரசாங்கம் அண்மையில் ஆராய்ந்ததாக பாதுகாப்பு அமைச்சுவட்டாரம் தெரிவித்திருந்தது.

இவ்வருடஆரம்பத்தில் நடைபெற்ற குரும்பசிட்டி பத்து லட்சம் ரூபா நகைக்கடைக்கொள்ளையும், இருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டமையும் யாழ் குடாநாட்டில் மீண்டும் வன்செயல்கள் தலைதூக்குவதற்கான அடையாளங்களென அஞ்சப்படுவதால் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவதா என்பதுபற்றி ஆராய பாதுகாப்பு அமைச்சில் 16 - 1 - 81ல் மாநாடு ஒன்று நடைபெற்றது.

பிரதிபாதுகாப்பு அமைச்சர் திரு. டி. பி. வேரப்பிட்டியா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பொலிஸ்மா அதிபர் திரு. அன. செனவிரத்தன, பிரதிபொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். பொலிஸ்மா அதிபர் இம்மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் அவசரகால நிலைமையை யாழ்ப்பாணத்தில் தற்போதைக்கு அமுல்படுத்துவது அவசியமில்லை யென்றும் நிலைமை மேலும் மோசமானல்தான் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தலாம் என்று தெரிவித்ததாக தகவல் அறிந்த வட்டாரம் கூறியது.

இவ்வாறு--அரசு சார்பு ஏடான தினகரன் தனது 17-1-81 வெளியீட்டின் முன் பக்கத்தில் ஒரு செய்தி பிரசுரம்செய்திருந்தது.

ஓராண்டிற்கு முன்புஇப்பகுயில் நடந்த சில துப்பாக்கிச் சூடுகளையும் கொள்ளைகளையும் காரணமாக வைத்து 1979ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி யு. என். பி. அரசாங்கம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தியதும் அச்சட்டத்தின் கீழ் ஆறு தமிழ் இளைஞர்கள் துடிக்கத் துடிக்கத் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதும் ஏராளமான இளைஞர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டு கொடுமைக் காளாகியதும் என்றுமே தமிழர்களால் மறக்கமுடியாதவை.

இந் நிலையில், சிறிலங்காவின் பல பகுதிகளில் கொள்ளைகளும் கொலைகளும் நடைபெற்றிருந்தும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் அவசரகால நிலைமையை அரசாங்கம் அமுல் படுத்த நினைப்பதற்கு வேறு ஏதாவது நோக்கம் இருக்க வேண்டு மென்றே நம்பப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, இன்றைய அரசியல் சூழ்நிலையில் கலவான தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சியினர் பெற்ற வெற்றியைச் சுட்டிக் காட்டி, தென்னிலங்கையில் வகுப்புவாதப் பிரச்சாரத்தில் சில புள்ளிகள் இறங்கியிருப் பதாகவும் தெரிகின்றது.

கலவானை தொகுதி இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு சரத்முத்தெட்டு வேகமையை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆதரித்ததுக்கான காரணம் தங்களுக்குப் புரியவில்லை யென்று யு. என் பியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் மேடையில் பேசிவருவதின் மூலமும் தமிழருக்கெதிரான உணர்வு சிறிலங்காவில் உருவாகி வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர் சிவா ஆகியோரை மாத்தறைக்கு அழைத்து அவர்களுக்குப் பெரும் வரவேற்பொன்றை அளிக்கும் முயற்யில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் ஈடுபட்டிருப்பதாக பத்திரிகைகளில்வந்தசெய்தியைப் பயன்படுத்தியும் தமிழருக்கெதிரான இன உணர்வை தென்னிலங்கையில் எழுப்ப ஒரு பெரும் அரசியல் கட்சியைச் சேர்ந்தோர் தூபம் போடுவதாக அதே வட்டாரங்களில் கட்டிக் காட்டப்படுகிறது.

### யு. என். பி. கூடாரம் காலியாகிறது!

ஐக்கிய தேசியக்கட்சியின் அக்கிரமப் போக்கால் மக்களிடையே அதன் செல்வாக்கு மங்கிவருவது யாவரும் அறிந்ததே.

அண்மையில் கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த கொமாதுறையில் நடந்த ஒரு கூட்டத்தில் மந்திரி தேவநாயகம் பேசும்போது எமது கட்சியை விட்டு ஆதரவாளர்கள் பிரிந்து செல்கின்ருர்களே என்று வேதனைப்பட்டுப் பேசியிருக்கிருர்.

இதிலிருந்தே ஐக்கிய தேசியக்கட்சியின் கூடாரம் காலியாகின்றது என்பது தெளிவாகின்றதல்லவா?

### ஏழைகள் வயிற்றில் மீண்டும் அடி!

நெற்சந்தைப்படுத்தும் திணைக்களம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் உத்தரவு பெற்ற வியாபாரிகள் மூலமும் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்து வரும் அரிசியின் விலையும் இரண்டு நாட்களுக்கு முன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது 1 கிலோ 4 - 65 ஆக விற்கப்படும் இந்த அரிசி இனி 5 - 65 ஆக இருக்கும்.

18 - 1 - 81ல் இருந்து, டீசல் பெற்ரேல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே!

# ஈழத் தமிழரை எம். ஜி. ஆர். இழிவுபடுத்தவில்லை!

### தலைவர் 'அமிர்' அறிக்கை



தமிழக முதல்வரின் பேச்சில் இலங்கையில் உள்ள நிலைமையையும் அவர் குறிப்பிட்டிருந்தாலும் சிலர் பிரசாரம் செய்யுமளவுக்கு இலங்கைத் தமிழ் மக்களுக்கு விரோதமான ஒரு பேச்சை அவர் நிகழ்த்தியதாக நாம் கொள்வது தவறு.

எனவே எவரும் அவசரப்பட்டு எந்தவிதமான முடிவுக்கும் வந்து தமிழக அரசுக்கும், தமிழக அரசை ஆதரிக்கும் மக்களுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையில் வீணை விரோதங்கள் ஏற்பட வழிவகுக்கக் கூடாது.

இவ்வாறு - மதுரையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர் அவர்கள் ஆற்றிய உரைபற்றி தமிழர் தலைவர் அமிர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்ற 4ம் திகதி தொடக்கம் 16ம் திகதிவரை தமிழகத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஒட்டியும், அதன்பின்பு நடந்த சுற்றுலாவை ஒட்டியும், அதைத் தொடர்ந்து சென்னையில்நடைபெற்ற பாராட்டுக் கூட்டங்களையொட்டியும் பல்வேறு தப்பும் தவறுமான செய்திகள் இலங்கையில் திட்டமிட்டு வானெலியினலும், சில பத்திரிகைகளினலும் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டிருக்கின்றன. அவற்றின் பலனகப் பல

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஈழம் தமிழா த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறுபடைப்போம், வா வா தமிழா!

புறப்படு தமிழா! போதுமுன் தூக்கம்!
பொழுதது விடிந்தது; பொன்னொளி பாராய்!
முறைப்படி பயணம் முடித்திடக் கிளம்பு
முயலல்ல நீயே! முழங்கிடும் வேங்கை!
மறப்படை வகுப்போம்! மதிலென ஆவோம்!
மார்பினை நிமிர்த்தி வாவா தமிழா
சிறைப்பட வரினும் சிந்தை நீ கலங்காய்
செந்தமிழ் மண்ணில் சிரித்துலா வருவோம்!

உன்வரவெண்ணி ஊர்தொறும் மக்கள்
உறக்கமே இழந்தார்; உற்சாகக் கடலில்
மண்ணெலாம் மூழ்கும்; மனையெலாம் விழாவே!
மங்கலப் பேரிகை; மாவிலை தோரணம்!
தென்னைகள், வாழை தெருவெல்லாம் நட்டார்
தேவுலகாகும் தென் தமிழ் ஈழம்!
என்னுயிர்த் தோழா எழுந்து நீ வா வா
எழுச்சியின் யாத்திரை இது நீ கிளம்பு!

இளைஞன் நீ எழுக! எழுச்சியின் வடிவம்!
எதிர்வரும் காலம் உன்னிரு கையில்!
விளையும் நெற்கதிரே! விமோசனம் நீதான்!
விடுதலை நாட்டின் விலாசமே வா வா
தளையினை அறுத்து தமிழ்ப்போர் நடத்து
தமிழ் உலகெங்கும் உன்பேர் இருத்து
களையினைப் பிடுங்கி காலடிபோடு
களப்போர் ஆட 'காக்கை'கள் வேண்டாம்!

தமிழ் மண் கொள்ள தருக்கர்கள் எழுந்தார்
தண்டு நீ நடத்து தமிழ்த்திரு மகனே
இமிழ்கடல் ஈழம் எந்தமிழ் நாடே
இராவணன் ஆண்ட மண்ணிது எழும்பு
குமிழ் நகைப் பெண்ணே குதித்து நீ கிளம்பு
கொடுமரசழிக்கும் கூட்டம் நீ விளம்பு
திமுதிமு வெனவே திரண்டு நீ வந்தால்
திருவிடம் வாழும் தேன்தமிழ் மகளே!

கன்னி நீ சொல்க! கன்மலை தானும்
கடுகென உடையும்! கடைவிழிப் பார்வை
விண்ணினை வில்லாய் வளைத்திடச் செய்யும்
விதியினை ஓங்கி விளக்குமாறடிக்கும்!
பண் மொழிப் பெண்ணே படையினை நடத்து
பகையது ஓடிப் பதுங்குது துரத்து
மண்ணெலாம் உன்னில் மயங்கியே வீழும்
மறவர்தாம் எதற்கு? மங்கை நீ போதும்!

கிழவோர் உருவில் கேள்வியே யாயினும்
கிளையுடன் சேர்வீர்! கிளுகிளுப்பூட்டும்
பழம் பெரும் கதைகள்; பைந்தமிழ்ப் பெருமை
பாங்குடன் இளைஞர் மனதினில் பதிப்பீர்!

வளம் பெரும் நாடு வைத்துநாம் ஆண்ட
வரலாறெல்லாம் வழுவின்றியுரைப்பீர்
குழம்புதல் இல்லாக் கூட்டம் நீ அறிவீர்
குமரரைக் கையில் கொண்டுடன் வருவீர்!

தலைவனின் வழியில் தமிழ்ப்படை எடுப்போம்
தருமவன் வார்த்தை தட்டாதேற்போம்
குலமது காக்கும் குடும்பம் நம் இயக்கம்
கொஞ்சமும் இதனுள் குழம்புதல் வேண்டாம்
பலமெது நமக்குள்? படையா? இல்லை!
பகைவரே அஞ்சும் பழுதிலா உறவு!
இலையிது போல இன்னொரு இயக்கம்
என்றுல கெம்மை ஏத்தவே வாரீர்!

காடென கொடிகள் கைகளில் ஆட
கதிரவன் அதிலே கண்பறித்தொளிர
ஓடிடும் உணர்ச்சி உடலெலாம் பாய
உதடுகள் தமிழின் ஓசையே எழுப்ப
நாடெலாம் உன்னை நயந்துமே போற்ற
நம் தமிழ் மண்ணில் நாம் உலா வருவோம்
தேடுதற் கரிய திரவியம் தமிழா
தென் தமிழ்ஈழத் திருத்தல யாத்திரை!

பொத்துவில் ஒன்றே போதுமே நமக்கு
பொங்கிடும் உணர்ச்சி! புலிக்கொடி பறக்கும்!
இத்தலம் காப்போன் எந்தமிழ் முருகன்
இவன் கை வேலுக் கிரையாம் பகைவன்!
அத்தலம் வணங்கி அணியது வகுப்போம்
அடலேறே நீ ஆர்த் தெழுகடல் போல்!
முத்தமிழ் நமது மூச்சது போனால்
முடிந்தது வாழ்வு! முழங்கு நீ சங்கே!

கல்முனை, தமிழைக் காக்குமோர் கோட்டை
கனி மொழிப்பகைவன் காலது வையான்!
சொல்முனை அவனை சுட்டெரித் தழிக்கும்
சுந்தரப் பெண்கள் சொண்டதைச் செய்யும்
வெல்முனை நாட்டில் வேறெது கூறு!
வெற்பையும் நொறுக்கும் வீரர்கள் நாமே!
வில்முனை அன்பாய் விரைந்திடு தமிழா
விடியலின் வசந்தம் விளையும் நல் நாளே!

(வளரும்)

**கவிஞர் வாகரைவாணன்**

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழகம் ஆதரவு தரும்!

## பொங்கல் விழாவில் 'நவம்' பேச்சு!

ஈழத் தமிழர்களின் நிலையைத் தமிழகத்தில் தொண்ணூறு வீதத்திற்கு மேலான மக்கள் அறிந்துள்ளனர். அவர்களுடைய ஆசி எங்களுக்கு உண்டு. அவர்கள் தமிழ்ஈழம் விடுதலை பெறுவதையே விரும்புகிறார்கள்.

இவ்வாறு சாவகச்சேரி, பா. உ. திரு. வி. என். நவரத்தினம் மட்டுவில் தெற்கு மகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது.

தமிழக நிகழ்ச்சிகள், அங்கு கூறப்பட்ட கருத்துக்கள் குழப்பமான நிலையை ஏற்படுத்தி உள்ளன. தமிழக முதல்வரின் பேச்சு தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை இலங்கை அரசும் தேவைக்கதிகமாகவே விமர்சித்துள்ளது. ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தலைவரை மதிக்கின்றேன் எமது இயக்கம் ஒருவிடுதலை இயக்கம். அந்த இயக்கத்தின் சார்பில்



கண்டிக்கவோ குறைகூறவோ மாட்டேன் இக்கூற்றை விமர்சித்து ஆதாயம்தேட முற்படுபவர்களைத்தான் கண்டிக்க வேண்டும்.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள், பிறநாட்டு அறிஞர்கள் பெருமக்கள் உட்பட அங்கு குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஈழத்தமிழருக்குப் பிரச்சினை உண்டு என்பதை அறிய வைத்தார்.

தமிழக முதல்வர் சிலகுறைபாடுகளையே சுட்டிக் காட்டினார் அதன் பேரில் நாம் தலைகுனிய வேண்டும். சமூக அநீதிகள் குறைபாடுகள் இன்னும் ஒழிந்த பாடில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். திறந்துவிடப்படாத ஆலயங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இனியாவது நமக்கு உணர்ச்சி வரட்டும். ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் சகோதரர்களாகசமத்துவமாக தமிழர் அனைவரும் வாழவழி செய்வோம். இதனைப் பொங்கல் தினம் பிரதிக்ஞையாக ஏற்றுக் கொள்வோம். இந்த ரீதியில் எமது ஒற்றுமையைக் கட்டி எழுப்பிக் காக்க பொங்கல் நாள் எழுச்சி எமக்கு உதவட்டும்.

அறிஞர் அண்ணா கூறியது போல எங்கு தமிழ் மக்களுக்கு இன்னல் நேர்ந்தாலும் அது நமது இன்னலாகக் கருதும் நிலை உருவாக வேண்டும். நம்மிடையே பிரதேச ரீதியான வேறுபாடுகள் இருப்பதாகக் கூறப்படுவதை நாம் மறுத்துவிடமுடியாது. தந்தைசெல்வா அதனை ஓரளவு ஒழித்து ஒற்றுமையை ஏற்படுத்தினார். அதை நாம் நிலைபெற வலுப்பெறச் செய்யவேண்டும்.

## மனித உரிமைக்கு ஆதரவு வழங்குங்கள்!

உலகம் முழுவதிலும் மனித உரிமைக்குப் பலத்த ஆதரவு அளியுங்கள் என்று ஜனாதிபதி கார்ட்டர் தமது பிரியாவிடைச் செய்தியில் அமெரிக்க மக்களைக் கேட்டுள்ளார்.

திரு. கார்ட்டர் எதிர்வரும் ஜனவரி 20ம் திகதி தமது பதவி துறக்கின்றார் என்பதும் திரு. றீகன் அமெரிக்காவின் 40வது ஜனாதிபதியாகப் பதவி ஏற்கின்றார் என்பதும் தெரிந்ததே.

## தமிழரின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்!

தமிழர்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் கல்வி, தொழில், பிரதேச அபிவிருத்தி ஆகியவற்றில் சமத்துவப் போக்கு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

தேசிய இனத்தின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இவற்றை அவர்கள் மீளப் பெறுவதற்காக நான் பாடுபடுவேன்.

இவ்வாறு கலவானையின் புதிய எம்.பியாகப் பதவியேற்றுள்ள திரு. சரத் முத்தட்டுவேகம விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

✲

## ஊரடங்குச் சட்டம் வாபஸ் பெறப்படும்

1972ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டில் பிரகடனம் செய்யப்பட்ட ஊரடங்குச்சட்டம் விரைவில் வாபஸ் பெறப்படுமெனத் தெரிகின்றது.

கடந்த எட்டு ஆண்டுகளாக நாட்டில் நடைமுறையிலிருந்த மேற்படிச் சட்டத்தை வாபஸ் பெறுவதற்கான பிரகடனத்தை ஜனாதிபதி மார்க்கோஸ் அறிவிப்பார்.

✲

## மருந்தக திறப்புவிழா

எதிர்வரும் 24ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கோண்டாவில்லில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரசினர் மருந்தக மனையினை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் பா. உ.வுமான திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் திறந்துவைக்க விருக்கின்றார்கள்.

மேற்படி திறப்புவிழா திரு. இ. பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெறவிருப்பதாக திரு. குணநாயகம் அறிவித்துள்ளார்

"உதயசூரியன்"
சந்தா விபரம்

| | |
|---|---|
| இலங்கை | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |
| இந்தியா | |
| ஒரு ஆண்டு | 75-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துளி தேன்!

பொருளீட்டப் புறப்படுகிறான் ஒரு காளை! பொழில் தரு எழில் போன்றாள் அமிழ்தெனும் உருவைப் பிரிந்து எங்ஙனம் செல்வதென ஏங்குகின்றான். மகிழ்வுறு காதலாலே மடி மீதும் மாந்தளிர் இதழ்மீதும் துடியிடைத் துவளத்துவள முத்தமழை பொழிந்த செல்வன், அனைத்தையும் மறந்து விட்டு அயலூர் நாடி எப்படிச் செல்வான்? அவன் கடந்து சென்றிட வேண்டியதோ காட்டுவழி! கூட்டுவிழிப் புருவத்தாள் - கூடல், ஊடலுக்கேற்ற பருவத்தாள் - கட்டழகி தனக்குப் போட்டியாக யாருமில்லையெனும் ஒரு கருவத்தாள் - அவளைப் பிரிந்துதான் அவன் காட்டுவழி கடந்து கனகமணிகள் ஈட்டுதற்கு வேற்றூர் சென்றிட வேண்டும். பொற்புடைப்பாவை - கற்புடை நங்கை - அவனுடன் ஆடி மகிழ்வதை விட; ''பொன்னும் மணியும் மின்னும் வைரமும் கிடைத்திடும்! வருக!'' என அழைத்திடும் அவ்வூர் அத்துணை சிறந்ததா? அவள்தான் அவனைப் பிரிந்திட ஒப்புதல் எளிதா? ''நீ செல்வதில்லையென்றால் என்னிடம் உரை! இல்லை செல்லத்தான் வேண்டுமென்றால்: நீ என்னைப் பிரிந்து சென்று திருப்பி வரும்போது - இங்கே யார் உயிருடன் இருப்பார்களோ: அவர்களிடம் நீ சென்று வருவதைப்பற்றிச் சொல்!'' என்பாளே குறளின் இன்பத்துப்பால் காட்டும் ஒரு கோமளாங்கி: அவளைப் போன்றவள் இவள்! தன்னுயிரை அவன் உயிருடன் இணைத்து வைத்திருப்பவள். அவனும் அவ்வாறே அவளுயிரையும் தன்னுயிரையும் வேறு வேருகக் கருதாதவன்!

அத்தகையவளைப்பிரிந்து எவ்வாறு செல்வது? இப்படி வினக்குறி எழுப்பும் நிலையோடு புலவர் அவனை நிறுத்திவிடவில்லை! அவனை அவனது நெஞ்சோடு பேசவைக்கிறார்! பொருளீட்டப் போகத்தான் வேண்டுமா? பொன்னார் மேனியளைப் பிரிந்து நிற்கும் அந்தப் பொல்லா நாட்களைச் சந்திக்கத்தான் வேண்டுமா? இந்தக் கேள்விகளுடன் அகநானூற்றுப் புலவர் - ''ஒரோடகத்துக் கந்தரத்தனார்'' என்பார் நிறுத்திடவில்லை! தமிழ் நிலத்து நிலையையும் இயற்கைச் சூழலையும் படம் தீட்டிக் காட்டுகிறார் அழகுமிகு அகத்துறைப்பாடல் ஒன்றினால்!

பொருளீட்ட அவன் செல்வதாயின் போக வேண்டிய வழி - காட்டுவழி! எத்தகைய காட்டு வழி?

பாதிரியின் புதிய பூக்களையும், கொழுந்துவிட்டெரியும் நெருப்பு போன்ற இதழ்கள் கொண்ட அலரிப் பூக்களையும் கலந்து தொடுத்து, தாழம்பூவின் தோட்டிலே தொகுத்துக் கட்டிய வண்டு மொய்க்கின்ற கண்ணியையும் தரித்துக்கொண்டு- காலிலே போட்டிருக்கும் தோல் செருப்புக்கள் சப்தம் எழுப்பி – நடந்தவாறு - கையிலே கோல்களைப் பிடித்துச் செல்லும் உமணர்கள் தங்களது வண்டிகளில் பூட்டியிருக்கும் வலிமை வாய்ந்த காளைகளையுடைய எருமைகள், மேட்டுப்பாங்கான இடங்களில் ஏறுவதற்குத் துணையாக வண்டிகளை இழுத்துப் பிடித்துக்கொள்ளும் போது எருமைகளின் கழுத்தில் உள்ள மணிகள் ஒலிக்கும். அந்த மணிகளின் ஒலியும் உமணர்கள் கூட்டமாக எழுப்பும் சீழ்க்கை ஒலியும் ஒன்றாக இணைந்து கேட்கும் அந்தக் காட்டுப்பகுதி ''ஓமை'' என்னும் மரங்கள் அடர்ந்து காணப்படும்! அந்தக்காட்டிலே பயத்துடன் வந்துகொண்டிருக்கும் புதியவர்களுக்கு அந்தச் சீழ்க்கையொலி மனித நடமாட்டத்தை அறிவிக்கும்!

**கலைஞர்**
**மு. கருணாநிதி**

வெப்பம் மிகுந்த அந்தக் காட்டுவழி கடந்து தொலைநாடு சென்று பொருளீட்ட வேண்டுமென்ற தூண்டுதல் ஒருபுறம் - ஆனால் அதேசமயத்தில் தன்னுடைய பிரிவினைத் தாங்காமல் துடித்திடப் போகும் தலைவியின் நிலைமை ஒருபுறம்: இரண்டுக்குமிடையே அவன் நெஞ்சம் ஊசலாடிற்று.

''என் நெஞ்சமே! முல்லையரும்புகள் சூடிகருமணல்போல் தழைத்த கூந்தலையுடைய என்காதலி என்னைப்பிரிந்து துன்பமின்றியிருப்பாள் எனக்கருதிக் கொண்டு அவளிடம் சென்று பிரிவுபற்றிய கொடிய சொற்களைக் கூறிடும் வலிமை உனக்கு இருக்கிறதா?''

இப்படித் தன் நெஞ்சுடன் உரையாடுகிறான்! பொருள் குவிக்கப் பிரிந்து சென்றால் பொற்றாமரை போன்ற அவள்முகம் குவிந்து விடுமே; என்று கலங்குகிறான். இன்று வந்து நாளை மறையும் பொருளைத் தேடிச் செல்வதைவிட, நெஞ்சிருக்கும்வரை என்றும் நிலையாக இருக்கும் அவளை; ஆம் - அவனது தலைவியைப்பிரிந்துபோக அவனால் இயலவில்லை! மானத்தை இழந்துவிட்டுப் புகழ் தேடுவதற்குப் போவதும், மனதுக்கு இனியவளைப் பிரிந்து சென்று பொருள் தேடுவதும் ஒன்று போல் தோன்றியது அவனுக்கு!

இந்த அகத்துறைப்பாடல்; காதல் உணர்வின் மகிமையை மட்டுமல்ல - காட்டில் உழன்றோர் வாழ்க்கை நிலையையும் எத்துணை அழகாகச் சித்தரிக்கிறது பார்த்தாயா?

இன்னலில் இருப்போருக்கும் இதழ்களில் சிந்திய ஒரு துளி தேனாக இருக்கட்டும் என்றுதான்; இன்று இந்த இலக்கியக் கடிதம்! இதோ அந்தப் பாடல்:-

''அந்தப் பாதிரித் துய்த்தலைப் புதுவீ
எரிஇதழ் அலரியொடு இடைபட விரைஇ.
வண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணி,
தோல்புதை சிரற்றுஅடிக், கோலுடை உமணர்
ஊர்கண் டன்ன ஆரம் வாங்கி,

அருஞ்சுரம் இவர்ந்த அசைவுஇல் நோன்தாள்
திருந்துபகட்டு இயம்பும் கொடுமணி, புரிந்து அவர்
மடிவிடு வீளையொடு கடிது எதிர் ஓடி,
ஓமை அம் பெருங்காட்டு வருஉம் வம்பலர்க்கு
ஏமம் செப்பும் என்றூழ் நீள் இடை,

அரும்பொருள் நசைஇப், பிரிந்உறை வல்லி
சென்று; வினை எண்ணுதி ஆயின், நன்றும்.
உரைத்திசின் வாழி - என்நெஞ்சே! ; 'நிரைமுகை
முல்லை அருந்தும் மெல்லிய ஆகி,
அறல் என விரிந்த உறல்இன் சாயல்
ஒலி இருங்கூந்தல் தேறும்' என
வலிய கூறவும் வலையோ, மற்றே?''

# ஈழத்தமிழர் பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை!

''அபிவிருத்தித் திட்டங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்றும், தமிழர் நலன் எதுவும் இலங்கை அரசினல் கவனிக்சப்டடுவதில்லை என்றும் திரு அ. அமிர்தலிங்கம் மனவிரச்தியுடன் கவலைப்பட்டுத் தெரிவித்திருக்கின்றார், அவர் இவ்விதமாக வலியுறுத்திக் கூறுவது சரியாக இருந்தால்; புதிய அரசியலமைப்பில் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், வெறும் கடதாசியில் மட்டும்தான், இவ்விஷயம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

''திரு. அ. அமிர் தலிங்கம், இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல; இலங்கையின் வடக்கு, கிழக்கு மகாணங்களில் வாழும் பெரும்பான்மை

## 'இந்து' நாளேடு ஏற்றுக்கொள்கிறது!

மக்களான தமிழ்மக்களின் அதிகாரபூர்வமான பேச்சாளரும் ஆகும். ஆகவே; எந்த இடத்தில், எதனைப்பற்றி, என்ன பேசுகின்றோம் என்பது அவர் தெரிந்திருக்கக்கூடிய தொன்றே. தங்களது இலட்சியமான தனித்தமிழ்நாட்டை அடைவதற்கு இறுதிவரை போராடப்போவதாக அவர் மதுரைத் தமிழ் மகாநாட்டில் கருத்து வெளியிடப்பட்டிருப்பதிலும் அர்த்தம் இல்லையென்று கூறிவிடமுடியாது பொறுப்புள்ள திரு. அமிர்தலிங்கம், எதனையும் சிந்தித்துத்தான் பேசியிருக்கமுடியும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், அவரது அரசாங்கமும் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளை யதார்த்த பூர்வமாக அணுகி, அவர்களின் குறைகளைக் கண்டறிய வேண்டும். கடந்தவருடம் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற இலங்கை அரசாங்கத்தின் பட்ஜட் விவாதத்தில் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில்; தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வுகாணப்படுவதைக் தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். தமிழ்மக்களின் பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது என்பதற்கு இந்தச் சான்றே போதும்

''தமிழ்மொழி, நாட்டின் ஒருதேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் தமிழர், தங்களது தாய்மொழியிலேயே தொடர்பு கொண்டு பதிலையும் பெற்றுக்கொள்ள உத்தியோகபூர்வமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இதில் விஷயம் என்னவென்றால்; மொழி சம்பந்தப்பட்ட உத்தரவுகள் எந்த வகையில் அமுல்செய்யப்படுகிறது என்பதுதான்! இதேபோல அரசாங்க உத்தியோகம் பெறுவதிலும், உயர் கல்விக்கு அனுமதி பெறுவதிலும் தமிழர்களுக்குக் காட்டப்பட்ட பாரபட்சம் நீக்கப்பட்டு விட்டதாகவும், இது சம்பந்தமாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், இதுவும் இதய சுத்தியுடன் செயல்படுத்தப்படவேண்டும்.

''இந்த விபரங்களை, 1977 ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் தொடர்பாக விசாரணை நடத்திய சன்சோனி கமிஷனும் வெளியிட்டதுடன்; தமிழர் மீது அனுதாபம் கொண்டு; ''தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க சகல கட்சிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாடு கூட்டப்படும் என்று ஜனதிபதி திரு. ஜெயவர்த்தன ஒருதடவை உறுதி தெரிவித்திருந்தார். ஆனல் இன்றுவரை இம்மகாநாடு கூட்டப்படவில்லை. இப்படியானதொரு மகாநாட்டை ஜனதிபதி கூட்டுவதற்கு இது தான் நல்லதருணம். இப்படியான மகாநாடு; திரு. அமிர்தலிங்கத்தின்கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதுடன் அரசாங்கம் தமிழ்மக்களின் உண்மையான பிரச்சனைகள் குறித்து ஏற்கனவே எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக சரியானதொரு கணிப்பையையும் காண்பதுடன் இதன் மூலம் அரசாங்கத்தின் நிலையும் தெளிவாகும்''

(நன்றி :- ஈழநாடு 16-1-81)

## அறவழிப் போராட்டப் பணிகளுக்குப் பாராட்டு!

மதுரை காந்தி கிராம் பல்கலைக் கழகத்தில் தமிழ் இளைஞர் - யுவதிகளுக்கு அறவழி வாழ்வு - சமாதானப்பணி தொடர்பான பயிற்சிகளை அளிப்பதற்கு அறவழிப்போராட்டக்குழு ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

அண்மையில், இந்தியா சென்ற அறவழிப்போராட்டக் குழுச்செயலாளர், திரு. ஜீவகதாஸ் காந்திகிராம் பல்கலைக் கழக உபவேந்தரைச் சந்தித்து இதற்கான பேச்சு வார்த்தைகளை நடாத்தினர்.

அறவழிப் போராட்டக்குழு தமிழ் மக்கள் மத்தியில் ஆற்றும் பணிகள்பற்றி - உபவேந்தர் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பொங்கல் விழா

சாவகச்சேரித்தொகுதி தமிழர்விடுதலைக்கூட்டணி- கடந்த தைப்பொங்கல் விழாவினை வெகுவிமரிசையாக மட்டுவில் கிராமத்தில் கொண்டாடியது.

சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் தலைமையிலான மாட்டுவண்டி, உழவு யந்திர ஊர்வலம் மீசாலையில் இருந்து ஆரம்பமானது.

பெருந்திரளான மக்கள் இவ்வூர்வலத்தில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

இவ் வூர்வலத்தின் போது 32 உழவு யந்திரங்களும் 10க்கு மேலான மாட்டுவண்டிகளும் கலந்து கொண்டன.

பொங்கல் விழா பா. உ. தலைமையில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ வேடிக்கை அரசியலோ ★ விடுதலைப் போராட்டம்?

**ஆசிரியர் பேசுகிறார்**

அண்ணு திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆதரவோடு மதுரைமாநகரில் அரங்கேறிய ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாடு அமர்க்களமாய் முடிவடைந் திருக்கிறது!

வீதிதோறும் அலங்கார வளைவுகள் -- விதவிதமான சோடினைகள் -- பண்டைத் தமிழர் பெருமையைப் பறை சாற்றும் ஊர்திகளின் அணிவகுப்புகள் -- செந் தமிழ் வளர்த்த பெரியோர்களுக்குச் சிலைகள் -- கண்ணுக்கும் கருத்துக்குமினிய கலை விருந்துகள் -- கவிதைப் பெருக்குகள் -- கண்டோர் வியக்கும் சொற்போர்கள்--அறிஞர் பெருமக்களின் ஆராய்ச்சி உரைகள்......... அப்பப்பா...........சொல்லி முடியாத அளவுக்கு சோபிதத்தை அள்ளி இறைத் திருக்கிறது மாநாடு!

**தமிழ்ப்பயிர் தழைத்துவளர -- பத்துக் கோடி ரூபாய் என்னும் தண்ணீரைப் பாய்ச்சியிருக்கிறது தமிழக அரசு! பாராட்டுகிறேம்! ஆனல்...........**

பசும்பாற் குடத்துள் ஒரு துளி விஷம் கலந்து விட்டது போல--

பரிமள சுகந்தம்பரப்பும் பூக்குவியலுள் இருந்து ஒரு பூ நாகம் தீண்டிவிட்டது போல--

**ஈழம் வாழ் தமிழர்களை எள்ளிநகை யாடிய எம். ஜி. ஆரின் வார்த்தைகளை எண்ணிடும் போது இதயத்தில் இரும்பாணிகளாய் அவை ஏறிக் கொண்டிருக்கின்றன.**

எம். ஜி. ஆரின் அந்த ஆணி வார்த்தைகளை இலங்கை வானெலி திரும்பத் திரும்ப தமிழரின் இதயங்களில் ஓங்கி அறைந்த வேளை சீசர் புருட்டசைப் பார்த்துக் கேட்ட கேள்வியே செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது!

1972ல் தந்தை செல்வாவுக்கும் தலைவர் அமிர் அவர்களுக்கும் தந்த வாக்குறுதியும் ---

1977 ல் இலங்கைத் தீவுமுழுவதும் தமிழர் இரத்தம் ஆருகப்பரவி ஓடியதைக் கண்டு பொறுக்கமுடியாது தமிழக சட்டசபையில் கொண்டு வந்த கண்டனத் தீர்மானமும்--

இவ்வளவு விரைவில் எம். ஜி. ஆர் அவர்களால் சுக்கு நூருக்கப்படும் என்று தமிழீழத் தமிழர்கள் கனவு கூட கண்டிருக்க மாட்டார்களே........... அப்படி என்னதான் எங்கள் தலைவன் அமிர் பேசிவிட்டார்?

நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு தமிழீழத்தின் தலை நகரங்களில் ஒன்ருக விளங்கும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது - சிங்கள ஏகாதிபத்தியம் செய்த அட்டூழியத்தை-செத்துப் போன தமிழர் உயிர்களின் சோகக் கதையை--ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் அவர்நினைவு கூர்ந்தார் -- அவ்வளவுதான்!

பொருத்தமான ஒரு இடத்தில் --பொருத்தமான ஒரு காரியத்தை தமிழ் ஈழ முதல்வர் செயததைப புரிந்து கொள்ள முடியாத தமிழக முதல்வர் பொங்கி எழுந்திருக்கிருர் -- ஆராய்ச்சி மாநாட்டில் அமிர்தலிங்கம் அரசியல் பேசலாமா என்று அமர்க் களப்படுத்திபிருக்கிருர்! அது போதாதென்று--

இங்குள்ள இரண்டாந்தர அரசியல் வாதிகளான இராசதுரை - தேவநாயகத்தின் நிலைக்கு இறங்கி - ஈழத்தமிழினத்தை இரண்டு மூன்ருகக் கூறு போடும் விதத்தில் 'யாழ்ப்பாணத் தமிழர்' என்று பேசி அவர்கள் மீது இல்லாதது பொல்லாததையெல்லாம் அள்ளிவைத்திருக்கிருர்.

பெரியார் - பேரறிஞர் அண்ணுவின் பெரும் பணிக்குப் பின்னும் - தமிழகத்தில் சாதிப் பேய் தலைவிரித்தாடுவதைத் தெரிந்திருந்தும் - யாழ்ப்பாணத்தில் சாதிபேதம் பார்க்கிருர்களே என்று நரம்பறுந்த யாழ்போல அபஸ்வரம் எழுப்பியிருக்கிருர்.

இஸ்லாமிய உடன்பிறப்புக்களை இங்கே யார் தள்ளிவைத்திருக்கிருர்கள்?

மூதூர் முகமதுஅலி - கல்முனை காரியப்பர் -- நிந்தாவூர் முஸ்தபா இவர்களெல்லாம் அரசியலில் முகம் காட்ட உதவியது தமிழர் இயக்கம் அல்லவா?

மசூர் மௌலானு என்னும் முஸ்லிம் மகனை செனட்டராக்கி அழகுபார்த்ததும் தமிழர் இயக்கம் அன்ருே!

மலையகத் தமிழரின் குடியியல் உரிமைகளை யு. என். பி. அரசாங்கம் பறித்தது கண்டு மனம் பதறியதால்தானே தந்தை செல்வா தமிழருக்கென புதிய இயக்கம் காணவேண்டி நேர்ந்தது!

**இந்த வரலாறெல்லாம் எம் ஜி ஆருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை - என்ருலும் - 'இலங்கைக்கு நான் வரவில்லையா' என்று கேட்டிருக்கிருர்!**

எம் ஜி ஆரைப் பொறுத்தவரையில்நமக்குள்ள ஒரே ஒருவேதனை --

**இலங்கைத்தீவைக் கட்டிஆளும் சிங்கள இன வெறிபிடித்த அரசு - தமக்கு என ஒரு தாயகம் கொண்ட தமிழர்களைத் திட்டமிட்டு அழிக்கும் கொடுமையை - தமிழகமுதல்வர் ஏதோ ஒருகட்சி அரசியல் என்று எண்ணிப் பேசியிருப்பதுதான்!**

இன அழிப்பு என்பது -- மனிதர்களின் அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய ஒரு சமுதாயப் பிரச்சனையேயன்றி வெறும் அரசியலல்ல! - இதனை எம் ஜி ஆர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று மெத்தவும் விரும்புகிறேம்.

'இலங்கையில் தமிழுக்கும் தேசிய அந்தஸ்து தரப்பட்டிருக்கிறது -எல்லாவிதவசதிகளும்தமிழர்களுக்குண்டு என்று' இராசதுரை தொண்டமான் கோஷ்டி மாநாட்டில் பேசியது உண்மையானுல், எதில் அரசியல் உள்நோக்கம் அடங்கியிருக்கிறது என்பதை எம் ஜி ஆர் அவர்கள் ஆறுதலாக இருந்து சிந்தித்துப் பார்க்க வேணடும் - அப்போது தான் அமிர் எழுப்பிய உரிமைக்குரலை அவரால் சரிவர உணர்ந்துகொள்ள முடியும்!

இதை விடுத்து - ஆரோ தந்த தவருன தகவலின் பேரில் - அல்லது உள்வீட்டு அரசியல் நிர்ப்பந்தத்தினுல் -- 'அமிர்தலிங்கம் அரசியல் பேசலாமா' என்று தமிழக முதல்வர் அங்கலாய்ப்பதில் அர்த்தமில்லை!

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில், இழந்த தாயகமாம் தமிழீழத்தை மீட்கும்விடுதலைப் போராட்டத்தில் இறங்கியிருக்கிருர்கள்.

இது - அவர்களின் வாழ்க்கைப் போராட்டம் - உயிர்ப்பிரச்சனை - வேடிக்கை விநோதமான அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட அவர்கள் தயாராயில்லை!

எனவே - 'எங்களைக் கேட்டுக் கொண்டா போராட்டத்தைத் துவங்கினீர்கள்' என்று இனியும் எம் ஜி ஆர் அவர்கள் கேட்டுக் கொண்டிராமல் -

**முஜிபுர் ரகுமானின் விடுதலைப் போராட்டத்திற்கு பிரதமர் இந்திராகாந்தி முன்வந்து ஆதரவு வழங்கியது போல் -**

தமிழகத் தலைவர்களும் - தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் தமிழினத்தின் விடுதலைக்கு தங்களின் தார்மீக ஆதரவைத் தந்துதவ வேண்டும்.

இதுவே - எங்கள் விருப்பம் - வேண்டுகோள்!

# ஆராய்ச்சி மாநாட்டில் அரசியல் கொண்டாட்டம்?

## வெளிநாட்டு வரலாற்றறிஞர் வேதனை!

**மதுரையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டைவிட சென்னையில் நடந்த மாநாடு மிகச் சிறந்ததாக இருந்தது. மதுரை மாநாடு எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. அது ஒரு அரசியல் விழாவாக மாறிவிட்டது என்று ஜப்பானிய நாட்டைச் சேர்ந்த வரலாற்று அறிஞர் டாக்டர் கராஷிமா கூறியுள்ளார்.**

இச்செய்தியை இந்து ஆங்கில நாளேடு தனது 10-1-81 இதழில் 7 ம் பக்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:

''நான் ஏமாற்றம் அடைந்தேன். அது ஒரு அரசியல் விழாவாக மாறிவிட்டது'' என்று டோக்கியோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் நூபொரு கராஷிமா உலகத் தமிழ்மாநாடு பற்றி கருத்து தெரிவித்திருக்கிருர்.

''ஆராய்ச்சிக் கருத்து அரங்கங்களின் ஏற்பாடுகளும் நிர்வாகமும் தகுதிபடைத்த உண்மையான உணர்வுள்ள கல்வியாளர்களின் பொறுப்பில் விடப்பட்டிருக்கவேண்டும்'' என்று டாக்டர் கராஷிமா கருதுகிருர். இது வரை நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகள் நான்கில் ஒன்று தவிர மற்ற எல்லா மாநாடுகளிலும் இவர் கலந்து கொண்டுள்ளார்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி பொது மக்களுக்கான நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்கள் நடத்தப்படுவது குறித்து டாக்டர் கராஷமா எந்தவிதமான எதிரான கருத்தும் உடையவரல்ல.

''தமிமொழி--கலாச்சாரம் ஆகியவற்றின்புகழை எடுத்துக்காட்டும் வகையில்; கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற தமிழர்களின் விருப்பங்களை நான் முழுமையாக உணர்றேன்'' என்று டாக்டர் கராஷீமா கூறுகிருர்,

ஆனுல் இவை மாநாட்டின் ஆராய்ச்சிப் பிரிவு நிகழ்ச்சிகளை பொதுப் படையான கொண்டாட்டங்களால் குழப்பப்படவோ இணைந்து நடத்தப்படவோ கூடாது என்றும், டாக்டர் கராஷீமா கூறுகிருர்.

ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடக்கும் இடம் தமிழ் அறிஞர்களும் தமிழன்பர்களும் கலந்து கொள்ள வகைசெய்யும் முறையில் கண்காட்சி, பட்டிமன்றம் மற்ற நிகழ்ச்சிகள் நடக்கும் இடத்தில் இருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ளது. என்ருலும் ஆராய்ச்சி கருத்தரங்கங்களின் நிர்வாகம் உண்மையான ஆரரய்ச்சியாளர்களின் கரங்களில் தரப்படவில்லை,

ஆராய்ச்சி கட்டுரைகளை தருவது குழுக்களாகக் கூடி கலந்துரையாடி விவாதிப்பதும் ஒரே நேரத்தில் ஒரு டஜனுக்கு மேற்பட்ட இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது ஒரு ஊனமாகவே இருக்கிறத.

ஆய்வுக்கட்டளை அளிப்பது பற்றிய விபரப்பட்டியலைப் பார்த்தால் ஒரே நேரத்தில் எனக்கு ஈடுபாடுள்ள ஆராய்ச்சிக்கட்டுரைகள் இரண்டு, மூன்று வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருக்கும். ஆனுல் நான் ஒன்றே ஒன்றில் தான் கலந்து கொள்ள முடியும்.

மேலும் இது போன்ற நேரங்களில் வல்லுநர்கள் அந்தக் கருத்தரங்கத் தலை

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி உணர்வில்லா இனம் முற்றாக அழிந்தே போகும்!

# தமிழா! தாய்மொழி உணர்வைத் தட்டி எழுப்பு!

### பேராசிரியர் க. அன்பழகன்

> "கமழுமுன் தமிழினை உயிரென ஓம்பு
> காணும் பிற மொழிகளோ வெறும் வேம்பு
> நமை யெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு
> நம்முரிமை தனைக் கடித்ததுஅப் பாம்பு"

நாம் நாளும் பேசியும் கேட்டும் எழுதியும் வரும் மொழி நமது தாய்மொழியாகும் தமிழ்! நமது அன்னையும் தந்தையும். நம்மைப் பெற்றதாலும் வளர்த்ததாலும் நாம் பெற்றவாய்ப்பாக அமைந்து வாழ்வோடு கலந்து ஊனோடு மிசைந்து உணர்வோடு ஒன்றித் தெளிவோடு வளர்ந்து மூச்சுடன் நிலவி ஊனாகி, உயிராகி, உள்ளொளியுமாக ஒளிரும் மொழி ஆகிவிட்டதால் அதன் அருமை பெருமைகளையும் தனிச் சிறப்பையும் தன்னிகரற்ற திறனையும் நாம் எண்ணிப் பார்த்திடவோ - ஆராய்ந்து தெளியவோ முற்படவில்லை.

பெற்ற தாயினிடம் அன்பு பூண்டாருங்கூடத் தாயுடன் வாழ்வதால் அவள் அருமையை உணர்வதில்லையன்றோ? தாயின் அளவற்ற அன்புங்கூட அவளது அருமையைப் பிள்ளை உணரத் தடையாகத்தானே அமைகிறது? தானாகக் கிடைப்பவளன்றோ தாய்! நாமாகத் தேடிப் பெறுவதானால் அன்றோ அருமை புலனாகும்! அதனால்தான் சிலருக்குத் தாயினும் தாரம் உயர்வாகத் தோன்றுவது போலும்!

தாய்க்குச் செய்யும் தவறும் -- இழைக்கும் குற்றமும் குறையும் சிலரால் உணரப்படாதது போன்றே தாய்மொழியைப் போற்றாமை, அதனிடம் பற்று கொள்ளாமை, கல்லாமை, கைக்கொள்ளாமை, அதன் உரிமையைப் பேணாமை முதலான குறைகளையும் குற்றங்களையும் நம்மால் உணர முடிவதில்லை போலும்!

நமது தாய்மொழியாம் தமிழ், தமிழ் மக்களாலேயே போற்றப்படாத நிலை ஒரு பக்கமும், ஆட்சி உரிமை பெறாத நிலை ஒரு பக்கமும், வேற்று மொழித் தாக்குதல்களால் ஆன நிலை ஒரு பக்கமும், சமய உணர்வு ஏதுவாகப் பிறமொழிக்குத் தந்த ஏற்றம் ஒரு பக்கமும் ஆகக் கடந்த பல நூற்றாண்டுகளாக நாலாப் பக்கமும் நெருக்கப்பட்டு அழுத்தப்பட்டு அமுக்கப்பட்டு வந்தது. ஒருகாலத்தில் -- தமிழகத்தின் வரலாற்றில் பொற்காலம் எனப்போற்றியுரைக்கப்படும் சங்க காலத்தில், மூவேந்தர் மடிதவழ்ந்து, நாவேந்தர் செந்நாவில் தவழ்ந்து, ஆட்சி மொழியாய் அரியாசனத்து அமர்ந்து செங்கோல் ஏந்தி முத்தமிழ் முடி புனைந்து விளங்கிய தமிழ் அன்னை -- சூழ்நிலையின் தாக்குதலால் அடிமை போன்று மிடிமைக்கு ஆளாகி நொந்து போன நிலையினளாயினள்.

தமிழ் ஒருவாறு தாழ்த்தப்பட்டது. தமிழ்மக்களே கூடத் தமது மொழி ஏதுவாகத் தம்மைத் தாழ்ந்தவர்கள் என்று உடன்பட்டுத்தாழ்த்திக்கொள்ளும் மனப்பான்மை பெற்றனர் எனில் தமிழன் நிலைக்கு வேறென்ன சான்றுவேண்டும்?

இதனைப் பிறமொழியாளர் சூழ்ச்சி என்பதைவிடத் தமிழ் மொழியாளர் தம் தகவின்மையால், அறியாமையால் மூட நம்பிக்கையால்விளைந்தவீழ்ச்சி என்பதே பொருந்தும்.

தமிழ் மக்கள் முதன் முதல் கேட்டு, அறியநேரிட்ட தொரு பிறமொழி வடமொழியாகும். ஏதேனும் ஒருவகையில் தமிழர்கள் வேற்று மொழி ஒன்றை அறிய முற்படுவாராயின் அது வடமொழியாயமைந்தது.

நாட்டில் வழங்கிய அரிய உண்மைகள் பலவற்றைச் சேர்த்து எழுதிவைக்கும் முயற்சியினாலேயே வடமொழி எழுத்து வடிவம் பெற்றதெனலாம். அதற்கு முன்னர் ஆரியர் தம்மொழிக்கு எழுத்துவடிவம் இல்லை என்பதும், இந்தியாவில் வாழத் தலைப்பட்ட பின்னரே இங்குவாழ்ந்த பழந்தமிழ்மக்கள் (பழந்திராவிடர்) கையாண்ட எழுத்து வடிவு கண்டு - தாமும் எழுத்துமுறை மேற்கொண்டனர் என்பதும் வரலாறு.

தென்னாட்டிலும் - குறிப்பாகத் தமிழகத்திலும், வைதீக - பிராமண சமயக் கொள்கைகள் ஒருவாறு இடம் பெற்றபோது அந்தச் சமயக்கருத்துக்களைப் பரப்பியோர் அதற்கு வலிவூட்டும் சமஸ்கிருதமொழியையும் பரப்பமுடியாவிடினும் முக்கியத்துவம் பெறச் செய்தனர். புரோகித வகுப்பார் - வட மொழியைப் பிற வகுப்பார் பயிலக்கூடாது என்று விதித்திருந்த தடையும் - அது அவர் தம் தன்னலத்தால் விளைத்த தடையாயினும் - தமிழர்க்கு நலமேவிளைத்தது என்று கருதலாம்.

வடமொழியில்அவர்கள் உருவாக்கி இருந்த வேதம், ஆகமம், சாத்திரம், புராணங்கள் ஆகியவை சமயப்பற்றுக் காரணமாகத் தமிழர்களால்போற்றப்பட வேண்டியவை என்னும் எண்ணம் ஊன்றப்பட்டு, அவையெல்லாம் கடவுட் படைப்பு - தெய்வங்களின் கட்டளை என்னும் நம்பிக்கை வளர்க்கப்பட்டுத் தமிழினும் வடமொழியே உயர்ந்தது என்னும் எண்ணம் நாட்டப்பட்டது.

ஆயர்கள், உயர்ந்தவர்கள் - பூதேவர்கள், ஆரியமாம் வடமொழி தேவமொழி, ஆரியாவர்த்தம் என்பதே நாட்டிற்குப் பெருமை என்று ஆரியப் புரோகிதவகுப்பார் பறைசாற்றினர். தொடர்ந்து நடைபெற்ற வைதிகக் கொள்கை பரப்பும் பணி - தமிழர்களை அந்தக் கருத்துகளுக்கு அடிமையாக்கியது.புரோகிதம்வெற்றி பெற தமது தொழிலுக்குக் கருவியாகும் வட மொழியை உயர்த்திடப் பிறமொழிகளை எல்லாம் தாழ்த்திக் குறிப்பிடலாயினர்.

ஆரிய இனத்தவர் தமக்கிடையே பிராமண, சத்திரிய, வைசிய சாதிகளை வகுத்துக் கொண்டு நாட்டின் தொல்குடி மக்களாகிய மற்றவர்களைத் தாழ்த்தி அடிமைப்படுத்திடும் முறையில் தஸ்யூக்கள் என்றும் சூத்திரர் என்றும் அழைப்பாராயினர். இழிபிறப்பாளர்-- தாசிமக்கள் - அடிமைகள் பிராமணர்கட்கு மேல்வருணத்தாருக்கும் தொண்டுசெய்யவேண்டியவர்கள் -- மனித உரிமைகட்கு அருகதையற்றவர்கள் - தம்மை நெருங்கக் கூடாதவர்கள் என்னும் பொருள்படச் சூத்திரர்கள என்று பெயரிட்டு வழங்கிய பின்னர் அவர்தம் மொழிகளையும் - இழிமொழியாக, சூத்திரர் மொழியாக, நீசர் பேசும் பாஷைகளாகக் குறிப்பிடுவது இயல்வதாயிற்று.

பிறப்பால்தாழ்ந்தவர்என்று ஒப்புக்கொள்ளும் மனநிலை பெற்றமக்களால் தமதுமொழி உயர்வுபற்றி எவ்வாறுஎண்ண முடியும்? வட புலத்தில் வடமொழி - சமயக் செல்வாக்காலும், ஆட்சியாளர் போற்றுதலாலும் உயர்ந்த நிலைபெற்றிருந்த காலத்திலேயே - தென்புலத்தில் தமிழ்மொழி உயர்நிலை பெற்றிருந்த போதிலும் - வடவாரியர் தமிழினை மதிக்க முற்படவில்லை.

தமிழையும் அதுபோன்று ஆரியரல்லாதார் பேசிய மொழிகளையும் பைசாசு பாகதம் -- பிசாசு மொழி என்றே வழங்கினர். ஆனால் தமிழர்கள் -- தமது மொழியின் உயர்வைப் போற்றிய நாட்களிலும் வட மொழியை இழிவுபடுத்தினர் அல்லர். ஆம், அப்படி இழிவுபடுத்தித் தம் மொழியை உயர்த்திப் பேசிப் பிழைப்பு நடத்தும் நிலையில் அவர்கள் தொழில் அமைந்ததில்லையே!

தம்மிடைய அடர்ந்து நின்ற சமய உணர்வு ஏதுவாகவும், பிற்காலத்தில் வேரூன்றிய சாதி உணர்வு ஏதுவாகவும், தென்னாட்டு மக்கள் எதிர்ப்பு உணர்வு கொள்ளவில்லை என்று கருதலாம். தமக்கும் தமது மொழிக்கும் ஏற்பட்ட இழிவு குறித்து அண்மைக் காலம் வரை பெரும் எதிர்ப்புக் காட்டவும் முற்படவில்லை என்பதே வரலாறு காட்டும் உண்மை.

சங்க காலத்தில், சமய ஆதிக்கம் தலை தூக்காததால் வடமொழி ஆதிக்கமும் ஏற்பட வழியில்லை. பின்னர் ஆறு, ஏழு நூற்றாண்டுகளில் இருந்துதான் சமய ஆதிக்கத்துடன் இணைந்து வடமொழி உயர்வும் தென்மொழி தாழ்வும் நடைமுறையில்-கோயில் வழிபாடு முதலானவை மூலம் இடம் பெறலாயிற்று.

அந்தக் கால கட்டத்தில் தோன்றிய புலவர்கட்கும் --- தேவாரம் பாடிய நால்வருக்கும்-- ஆழ்வார்கட்கும்-- கம்பர் முதலான கவிஞர்கட்கும் தமிழையும் வடமொழியுடன் ஒப்பிட்டுச் சமநிலை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. வடமொழியாளரால் ஒதுக்கி வைக்கப்பட்டு -- தாழ்த்தப்பட்டதமிழை மக்கள்கருத்தில் உயர்த்தி நிறுத்தி, வடமொழியாளரையும் ஏற்கச் செய்வது இயலாதெனினும் ஒரு உள்ள நிறைவு காண அந்த முறையைக் கையாண்டனர் எனலாம்.

அப்பரும் சுந்தரரும் -- சம்பந்தரும் மாணிக்கவாசகரும் தாம் உள்ளம் உருகக் கேட்போர் சிந்தை உருகப் பாடிய தேவாரப் பாக்களெல்லாம் எம்மொழியில் பிறந்தன!

பெரியாழ்வாரும் . நம்மாழ்வாரும் ஆண்டாளும் பாடிய பாக்கள் எல்லாம் எம்மொழியில் பாடப்பட்டன? அவர்கள் எல்லாம் அக்கால நிலையில் தியாகய்யராகவோ -- தீட்சிதராகவோ தெலுங்கில் பாடியிருக்கவாய்ப்புத்தான் உண்டா? வேறு எம்மொழியில் பாடிடுவர்? எனவேதான் தாம்பாடக்கூடியதமிழ்-தாம் பாடவும் உணரவும் வழியாகும் தமிழ் - தம்மையே மெய்மறந்து உருகச் செய்திடும் தமிழ் எப்படித் தாழ்ந்ததாகும் என்னும் எண்ணம் அவர்கட்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

தேவாரமாய், திருவாசகமாய் - திருவாய் மொழியாய், திருப்பாவையாய் பொழியும் மொழி தாழ்ந்ததன்று என்று தெளிவு கொண்டு வடமொழியுடன் ஒத்தநிலை உடையதாய் ஒவ்வோரிடங்களில் சுட்டுவாராயினர். தமிழன் கண்டாய் - ஆரியன் கண்டாய் என்பன போன்று வருவன சில இதனை உணர்த்தும். தமிழை வடமொழிக்கு இணையாக ஏற்கச் செய்யும் எண்ணம் உந்த, திருவிளையாடற் புராணஆசிரியர் பாடியதன் பகுதி இது:

''வடமொழியைப்
பாணினிக்கு வகுத்தருளி
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்
மொழியை உலகமெலாம்
தொழுதேத்தும்
குடமுனிக்கு வகுத்தளித்தார்
கொல் ஏற்றுப்பாகர்''

வட மொழியை வழங்கிய சிவனேதான் தென்மொழியை அகத்திய முனிவருக்கு வகுத்தளித்தான். அதுவும்வடமொழியோடு தொடர்புடைய தென்மொழியை உலகமெல்லாம் வணங்கிப்போற்றும் உயர்நிலை எய்திய அகத்தியருக்கு வகுத்தளித்தான் என்று கூறுவதால் தமிழின் தாழ்வை மாற்ற முற்பட்டார் அப்புலவர் எனக்கருதலாம்.

அதேமுறையில்தான் இறைவனைப் போற்றிப்பாடும் அடியவர்கள் - சிவனே தமிழ்ஆய்ந்ததாகவும் - தமிழ்இசை கேட்டு நெகிழ்ந்ததாகவும் கற்பனையாகப் போற்றி - தமிழ்மொழிக்கு உயர்வு தேடினர் எனலாம். ''உயர் மதிற்கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின், துறைவாய் நுழைந்தனையோ? அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ, இறைவா'' எனவரும் பாடல்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## அமரர் மாணிக்கவாசகர் நினைவுநாள்

கற்குடாத் தொகுதியின் முன்னாள் பா. உ. வும், தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினருமாகவிளங்கிய அமரர் வொ. மாணிக்கவாசகர் அவர்களின் நினைவுநாள் இம்மாதம் 15-ம் திகதி கற்குடாத் தொகுதியில் அனுட்டிக்கப்பட்டது.

மேற்படிதொகுதியில் இன்று கொழுந்துவிட்டெரியும் இன உணர்ச்சியை மூட்டிவிட்டவர்களில் மாணிக்கவாசகர் மறக்க முடியாதவராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதஉரிமையைபுதைக்கும் 'மயானபூமி'யா ஆசியா?

சிங்கப்பூர் பாணி ஆட்சிமுறையில் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆருக்கு பிரியம் அதிகம் என்பது உலகப் பிரசித்தம். ஆனால்.... அந்த ஆட்சியின் கீழ் மனித உரிமைகள் எவ்வளவு மோசமாக அழிக்கப்படுகின்றன என்னும் உண்மையை அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் அறிக்கையிலிருந்து நாம் அறியும்போது அதிர்ச்சியடைந்து விடுகிறோம்.

இத்தகைய கொடுமை நிறைந்த ஆட்சிமுறையையா ஜே. ஆர். விரும்புகின்றார் என்ற கேள்வியும் நம் கூடவே பிறந்து நம்மை மேலும் பயமுறுத்துகின்றது!

கடந்த ஆண்டில் சிறைக் கைதிகளாக வைத்திருந்த பலரைப் பல ஆசிய நாடுகள் விடுவித்துள்ளன. எனினும் இன்னும் பலர் நீண்ட காலத்திற்கு விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்படடுள்ளனர். எடுத்துக்காட்டாக இந்தோனேசிய அரசாங்கம் 1977 டிசெம்பரில் 10,000 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளதாக அறிவித்துள்ளது. இவர்களில் பலர் பன்னிரண்டு ஆண்டுகட்கு மேலாக எதுவித விசாரணையுமின்றிச் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். விசாரணைக்கு உட்படுத்தப்படாத மிகுதிச் சிறைக் கைதிகளை 10,000 என மதிப்பிட்டு இத்தொகையை 1979ன் முடிவில் விடுவிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இது எதனை எடுத்துக்காட்டுகின்றது எனின் மிகுதியாக உள்ள பல அரசியல் கைதிகள் (விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள கைதிகளின் பின்னணியே இவர்களின் பின்னணியுமாகும்) சிறையில் இருந்து விடுவிக்கப்படக்கூடியவர்கள் விடுவிக்கப்படவேண்டியவர் என அரசினால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கைதிகளில் பலர் 13 அல்லது 14 ஆண்டுகள் சிறையில் வாழவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஆசியாவின் ஏனைய பகுதிகளில் சிறைக்கைதிகளை விடுவிப்பதோடு ஆட்களை புதிதாக அல்லதுமீளக்கைது செய்வதற்குச் சான்றுண்டு கொரியாக் குடிஅரசை (தென்கொரியாவை) பொறுத்தவரை ''அடிப்படை உரிமைகளை மீளத்தருக'' எனக்குரல் எழுப்பியோரை 1976 ஐ அடுத்து அடைக்கப்பட்டோர் பின்பு இறுதியில் விடுவிக்கப்பட்டனர். எனினும் மாணவர்கள் தொழிலாளர்கள் போன்ற ஏனையோர் தொடர்ந்து சிறையில் இருக்கின்றனர். சென்ற ஆண்டில் அடைக்கப்பட்ட சிம்சிகா போன்ற பெயர் பெற்ற கவிஞரையும் ஏனைய கைதிகளையும் அரசுக்கெதிராக கருத்து தெரிவித்தனர் என்ற காரணத்திற்காக அரசாங்கம் அவர்களை விடுவிக்க மறுக்கின்றது. இன்றுள்ள அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும்? அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்னும் மாணவர்களால் அண்மையில் எழுப்பிய கிளர்ச்சி காவற்படையினால் முறியடிக்கப்பட்டு கணக்கிட முடியாத மாணவர்களை சிறையில் அடைக்கப்பட்டனர்.

காலம் தோறும் பிலிப்பைன்சிலும், வங்காள தேசத்திலும் தடுப்புக் காவலில் உள்ளோருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்சில் தடுப்புகாவலில் வைக்கப்பட்டிருந்தோர் விடுவிக்கப்பட்டதோடு, புதிதாக வேறுபலர் சிறையில் அடைக்கப்பட்டனர். அத்துடன் கேள்வி முறையின்றி, பல கைதிகள் சாகடிக்கப்பட்டுள்ளனர் என அரசாங்கச் குற்றச் சாட்டுக்கள் கிடைத்துள்ளன, வங்காள தேசத்தில் 1977 செப்டம்பர், ஒக்டோபரில் நிகழ்ந்த இரு வெற்றி பெறுத படைக் கிளர்ச்சிகளை அடுத்து சதி முயற்சியில்ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி 130க்கு மேற்பட்ட கைதிகளை அரசு தூக்கிலிட்டது. இவ்விதம் தூக்கிலிடப்பட்டோர் எண்ணிக்கை பல நூற்றுக்கணக்காகும்.

கம்பூச்சியாகுடியரசிற்கும் (கம்போடிய) அகதிகளாக வந்தோர் சாகடிப்பது பற்றியும் சிறையிடப்படுவது பற்றியும் தொடர்ந்து பேசிவருகின்றனர். தனது நாட்டிற்குள் நடு நிலை வகிக்கும் அனைத்துலகப் பார்வையாளர்கள் வருகை தருவதைத் தடுத்ததோடு 1978 மார்ச்சில் துன்புறுத்தப்படுவதாக குற்றம் சாட்டப்படும் நிகழ்ச்சிகளை ஒட்டித் தகவல் தரும்படி மனித உரிமைகள் மீதான ஐச்கிய நாடுகள் ஆணைக் குழுவினால் (ம. உ.ஐ. நா. ஆ) வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது கொடுக்கப்படவில்லை.

மனித உரிமைகளை ஒட்டிங்காரியமக்கள் ஆட்சிக்குடியரசு (வட கொரியா) விதித்துள்ள கடும் தடைகள் மனித உரிமைகள் மீறப்பட்ட செய்தியை வெளி உலகம் அறிய முடியாமல் செய்துள்ளது. மனித உரிமைகள் மீறப்பட்டது பற்றி தகவல்கள் தரத் தடுக்கும் மற்றைய நாடு பர்மாவாகும். மிகப் பெருமளவான முஸ்லீம் கைதிகள் வங்காள தேசத்திற்குக் குடிபெயர்ந்து சென்றமை மனித உரிமைகள் மீறப்படுவதன் அளவினை எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த ஆண்டில் மக்கள் சீனக் குடியரசில் அரசியலுக்காகவும் ஏனைய காரணங்களுக்காகவும் கட்சித் தலைவர்கள் பிடித்தடைக்கப்பட்டுள்ளனர் அதே வேளையில் தேசிய அரசியல் தகராறில் ஏதோ ஒரு பக்கத்திற்கு உரியவன் என்ற முறையில் முன்பு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கட்சித்தலைவருக்கும் ஏனையோருக்கும் அரசியல் மறு வாழ்வு வழங்கப்பட்டுள்ளது. பொது அமைதியை நிலை நாட்வது என்ற பெயரிலும் அரசியல் குற்ற வாளிகளை தண்டிக்கின்றோம் என்ற பெரிலும் தூக்குத் தண்டனையும் தொடர்ந்துசீன அரசு கையாளுவது கவலைக்குரிய விடயமாக விளங்குகின்றது. அரசியல் குற்றங்களுக்காகவும் ஏனைய பொதுக் குற்றங்களுக்காகவும் உடனடியாகத் தூக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக சீனாவின் பல பதிகளிலிருந்தும் செய்திகள் கிடைத்துள்ளன.

## அனைத்துலக மன்னிப்புக் கழக அறிக்கைதரும் சில அதிர்ச்சித் தகவல்கள்!

வியட்நாமில் அரசியல் மீள் கல்வி' புகட்டுகிறார்கள் என்ற பெயரில் 10,000க்கு மேற்பட்ட மக்களை வியட்னாம் அரசு சிறையில் வைத்துள்ளது 1975 மேயில் தேயூ அரசு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மீள்கல்வி இருக்கும் என வியட்னாம் அதிகாரிகள் முன்பு எடுத்துரைத்தனர் ஆனால் குறிக்கப்பட்ட காலம் கடந்த நிலையில் கூட பலர் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருக்கப்படுவது கவலையைத்தருகின்றது.

பாகிஸ்தானின் புதிய போர்க்கால சட்டஅரசு அரசியல் எதிர்ப்பினைக் கட்டுப்படுத்துவதற்கு பலவழி முறைகளைக் கொண்டுவந்துள்ளது. அரசியல் கைதிகளின் எண்ணிக்கை மிக அதிகரித்து பல ஆயிரக்கணக்கில் இருக்கின்றது. அமைதியான அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொண்டோர் என பிடிக்கப்பட்ட ஆகக்குறைந்த 160 அரசியல் கைதிகளுக்கு கசையடி கொடுக்கப்பட்டது. அரசியற்கட்சி செய்தி இதழை மூடியதற்கெதிராக உண்ணா நோன்பினை (விரதம்) மேற்கொண்டதற்காக ஏறக்குறைய 150 செய்தியாளர்களும் செய்தி இதழ் தொழிளாளரும் சிறையில் அடைக்கப்பட்டனர், போர்கால அரசு களவெடுப்பதற்குத் தண்டனையாகக் கையை வெட்டுவது என்ற சட்டத்தை கொண்டு வந்தது.

கடந்த இரு ஆண்டு காலங்களில் மலேசியாவிலும் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுப்புக்காவலில் பலகைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் அடைக்கப்பட்டோரில் பலர் முக்கியஅரசியல் தலைவர்களாவர். உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழேயே மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

தேசியபாதுகாப்பிற்குஆபத்தானவர்கள் என்ற பெயரில் தனது பரந்த அதிகாரங்களை பயன்படுத்தி மக்களை அடைக்கிறது சிங்கப்பூர் அரசு. விசாரணையின்றி நீண்டகாலத்திற்குப் பல அரசியல் கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். கல்தான்னீபுறுரையில்13அரசியல் கைதிகள் மிகநீண்டகாலத்திற்குத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் 14 ஆண்டுகளுக்கு மேலாக விசாரணையில் வைக்கப்பட்டுள்ளனர்.

1978 ஏப்ரலில் ஆப்கானிஸ்தானில் படை சதிசெய்து முன்னைய குடியரசுத் தலைவரையும் அவரின் குடும்பத்துஉறுப்பினர் பலரையும் சாகடித்ததோடு மிகப் பெருமளவு மக்கள் அரசியல் காரணங்களுக்காககைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் பேராளர்கள் இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேசம், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு வருகைதந்து இந்த நாடுகளில் மனித உரிமைகளின் நிலைபற்றி இவ்வரசுகளின் உறுப்பினருடன் உரையாடல் நடத்தியது. ஆசியாவில் பலஅரசியல் கைதிகள் வைக்கப்பட்டிருப்பதனால் தனிமழக்குகளில் பிரதிநிதித்துவத் தெரிவினை நடத்துவது அனைத்துலக மன்னிப்புக்கழகத்தின் வழிமுறையாகும் குறிப்பிட்ட நாடுகளில் உள்ள வகைப்படுத்தப்பட்ட கைதிகளுக்குப் பொதுத் தூண்டுதல் அடிப்படை உதவுவதும் கழகத்தின்பணியாகஅமைந்துள்ளது,

1977-78 இல் வங்காளதேசம், பிலிப்பைன், இந்தோனேசியா, தாய்வான், தாய்லாந்து ஆகிய நாடுகளின் கைதிகள் சார்பில் அனைத்துலக பிரசாரத்தை அனைத்துலக மன்னிப்புக் கழகம் நடத்தியது. அத்துடன் தென்கொரியா, மலேசியா, புருணை போன்ற நாடுகளின் சார்பில் குரல் எழுப்பி நடவடிக்கை எடுத்துள்ளது இதே காலப்பிரிவில் இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேசம் போன்ற நாடுகள் பற்றி இவ்வமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## முஸ்லிம்களின் வீடுகள் தீக்கிரை!

தெல்தொட்டைப் பகுதியில் கடந்தகால அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிகளில் குடியேறியிருந்த முஸ்லிம்குடும்பங்களினது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு அவர்கள் விரட்டியடிக்கப் பட்டுள்ளனர்.

இக்காணிகள் அரசாங்க வர்த்தமானி மூலம் விண்ணப்பம் கோரப்பட்டு தகுதியானவர்களுக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது.

1977ம் ஆண்டு மார்ச்மாதம் ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் 161குடும்பங்களுக்கு இக்காணி பங்கீடுசெய்யப்பட்டது. இதில் 30 முஸ்லிம் குடும்பங்களுக்கு காணிகள் கிடைத்தன. இந்தக் காணிகள் வசதியற்றவர்களுக்கே வழங்கப்பட்டன.

முஸ்லிம் குடும்பங்களின் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டு அவர்கள் விரட்டியடிக்கப் பட்டமை திட்டமிட்ட சதியா என அப்பகுதி மக்கள் வினவுகிறார்கள்.

(நன்றி; 'அல் ஹிலால்')

## 'சுதந்திர'னுக்கு ஏன் இந்த சுரண்டுகிற வேலை?

18-1-1981ல் வெளியான சுதந்திரன் இதழில் யாரோ ஒரு 'ஆவலாதி' இரசிகன் கவிஞர் காசி ஆனந்தனைப் பற்றி எழுதியிருக்கிறார். அதில் ---

சொந்தமாக ஒரு கவிதை கூட எழுத முடியாமல் சொந்தப் பத்திரிகையில் பழைய கவிதையை வெளியிடும் அளவுக்கு சிந்தனைச் சிறகொடிந்து கிடக்கும் நிலைகண்டு இரங்குகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு முதலில் சொல்லிக் கொள்வோம் ---

'சதந்திரன்' போல 'உதய சூரியன்' யாரோ ஒருசிலர் மட்டும் கிறுக்குவதற்கான பத்திரிகையல்ல. அது தமிழ்ப் பேசும் மக்களின் பொதுச் சொத்து!

கவிஞரின் பழைய கவிதையை 'உதய சூரியன்' வெளியிட்டது கண்டு வயிற்றிலடித்துக்கொள்ளும் இரசிகன் 11-1-81 சுதந்திரனில் கவிஞரின் அதேகவிதை வெளியிடப்பட்டதைக் காணவேயில்லையா?

சுதந்திரன் சும்மா மற்றவர்களைச் சுரண்டுகிற வேலையை விட்டுவிட்டு ஏதாவது ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய வேண்டுமென்றே மக்கள் விரும்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

# மொழி உணர்வில்லா இனம் முற்றாக அழிந்தே போகும்!

வரிகள் - இறைவனைத் தமிழுடன் உறவாட வைப்பதே. இறைவன் பெயரால் வடமொழி பெற்றுள்ள ஏற்றத்துக்கு ஈடு கொடுக்கும் வழி என்று கருதியதின் விளைவே எனலாம். ''தண்டமிழ் மதுரம் கூட்டுணஎழுந்த வேட்கையாலெனில் இக்கொழி தமிழ்ப் பெருமை யாரறிவார்? என்னும் வரிகள் மதுரைக் கலம்பகத்தில் காண்பன. சிவனும் முருகனும் மதுரையாண்ட பாண்டியர்களாகத் தோன்றியதாகக்கூறி அதற்கு அவர்களின் தமிழ்வேட்கையே காரணம் என்று கூறி மகிழ்கிறார்.

இவ்வாறெல்லாம் தமிழுக்குப் பெருமைதேடச்சிவனையும் முருகனையும் திருமாலையும் துணைக்கழைத்திட வேண்டிய நிலையே நெடுங்காலம் நிலவியது. அகத்தியரே தமிழைவகுத்தார் என்னும் கருத்து சான்றுடையதல்ல, தொன்மையாக நிலவும் தமிழை அகத்தியரே வகுத்தார் என்பதை ஏற்காத கம்பர் ---

''என்றுமுள தென் தமிழை
இயம்பிஇசைகொண்டார்''

என்றுதான் பாடியுள்ளார்.

எந்நாளும் தொன்றுதொட்டு உளதாகிய தமிழைப் பயின்று நூல்இயற்றிப் புகழ் கொண்டவர் அகத்தியர் என்பதே கம்பர் கருத்தாகும்.

''இருந்தமிழே உன்னால்
இருந்தேன் இமையோர்
விருந்து அமிழ்தம்
என்றாலும் வேண்டேன்''

என்று பாடினார், தமிழ்விடு தூது இயற்றிய புலவர்.

தமிழின்இனிமை, மேன்மை, தனிமை எவ்வளவு சிறப்புடையதாயினும் - கடவுளே படைத்தார் என்பதாகக் கூறப்படும் கருத்து மொழி நூலறிஞரால் ஏற்கப்படாதது. இது வடமொழிக்காயினும் வேறு எம்மொழிக்காயினும் பொருந்துவதே.

மொழி என்பது - மக்கள்கூடி வாழும் இயற்கையினால் ஒருவரது அவாவை, துன்பத்தை மற்றொருவரிடம் தெரிவிக்க எடுத்துக்கொள்ளும் முயற்சியால் மெல்லமெல்ல உருவாகி நாளடைவில் பொருள் விளக்கமாகக்கூடிய ஒலிகளாக வடிவெடுப்பது. ஒலிகளைப்பொருள் குறித்தனவாக வழங்கும்முயற்சியில் மக்கள் பெறும் வெற்றியே மொழியின் முதல் வடிவமாகும்.

அவ்வாறு இயற்கையில் தோன்றிய மொழிகளுக்கே -- தமிழே தொன்மையானது, இயல்பானது, வளமானது முதுமை காணாதது வழக்கருதது என்றெல்லாம் பெருமை கொள்ளஇடமுண்டு. எனினும் இது தமிழைத்தாழ்த்திஉரைத்தாரது கருத்துக்களை முற்றிலும் மறுத்துரைத்ததாகாது.

ஏனெனில் வடமொழியின் துணையின்றியும் - வடமொழிச் சொற்களைக் கலவாமலும் மற்ற இந்திய மொழிகளைப் போன்றே. தமிழ் மொழியும் இயங்கவல்லதல்ல என்றே பலரும் கருதி இருந்தனர்: அவ்வாறே இந்தநூற்றாண்டின் முற்பாதி வரையில் வழக்காடியவர்களும் உண்டு. அவர்தம் கூற்றைச் சான்றுகள் தந்து மறுத்திடுவதற்கு மேல்நாட்டாரின் தமிழ்த்தொண்டே வழிகோலியது.

கடந்த நூற்றாண்டில் மேல்நாட்டினின்றும் தமிழ்நாட்டிற்கு கிறித்தவசமயத் தொண்டுஆற்றவந்த டாக்டர் கால்டுவெல் அவர்கள் தமிழறிஞர்களே வியந்து போற்றும் வகையில் தமிழுக்கும்தொண்டு செய்தார். பேரறிவுத்திறம் வாய்ந்த கால்டுவெல் அவர்கள் இருபதாண்டுகளுக்கு மேல் தொடர்ந்துபாடுபட்டுதமிழையும், பிறதிராவிட மொழிகளையும், அதன் வேர்ச் சொற்களையும், அவற்றின் பொருளையும்- அவ்வம் மொழிகளின் இலக்கணத்தையும்ஆராய்ந்து, ''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்னும் அரியதொரு நூலை 1856-ஆம் ஆண்டில் முதலில் வெளியிட்டார். அந்நூலில் நிறுவப்பட்ட உண்மைகள் பல. திராவிடக் குடும்பமொழிகளுள் தொன்மையானமொழி தமிழ் எனவும், அது பிறமொழி துணையின்றி இயங்குவது எனவும், அது வடமொழியின் வழி மொழியும்அல்ல, அம்மொழித் துணையும் தமிழுக்குத் தேவை இல்லைஎனவும், வடமொழியின் மூலச்சொற்கள் பல தமிழ் மொழியினின்றே ஏற்கப்பட்டவை எனவும் அந்நூலில் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். கால்டுவெல் அவர்கள், நடத்திய ஆராய்ச்சியின் சிறப்பினால், அவரைத் ''திராவிட மொழிநூலின்தந்தை'' என்று போற்றிக் குறிப்பிடுவர்.

''தமிழ் எம்மொழிக்குந் தாழ்ந்து வளையாது தலைநிமிர்ந்து நின்று, தன் தனித்தன்மை காத்து, தன்னை அணைத்து அழிக்க வந்த வடமொழியையும் வலுவிழக்கச் செய்து வாழ்ந்து வளர்கிறது'' என்னும்பேருண்மையை நிலைநாட்டிய அப்பெரியாரே -- தமிழ் மொழியைத் தலைநிமிரச் செய்தவர் ஆவார் எனில் மிகையாகாது.

அவரைத் தொடர்ந்து பெரும் புலமை மிக்கவரும் உரம் பெற்ற தமிழ் நெஞ்சுடையவருமான 'மனோன் மணீயம்' சுந்தரம் பிள்ளை அவர்கள்-- தமிழின் முதன்மையை விளக்கியும், மேன்மையைப் புலப்படுத்தியும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் ஒன்று இயற்றினர். 'நீராருங் கடலுடுத்த' என்று தொடங்கும் அப்பாடலே -- தமிழக அரசு நிகழ்ச்சிகளின் துவக்கத்தில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' ஆகப் பாடுமாறு தமிழக முதல்வராக விளங்கிய கலைஞர் அவர்களால் ஆணை இடப்பட்டு, நடைபெற்று வருகிறது. அப்பாடலின் இரண்டாவது பகுதியில் சில வரிகள் காலங்கருதிப் பாடுமாறு செயயப்படவில்லை. அவ்வரிகளுள்,

''ஆரியம் போல் உலக
வழக்கழிந் தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து
வாழ்த்துவமே''

என்பதும் இடம்பெறும்.

எவ்வளவோ உயர்த்திப் பேசப்படினும் உலக வழக்கினில் -- மக்கள் நாவில் ஆரியமாம் வடமொழி நடமாடாது வழக்கழிந்து போனது போலன்றித் தனது சிறப்பான இளமை இயல்பால் மக்கள் வழக்கினில் நாளும் வாழும் மொழி, தமிழ் என்பது எண்ணி எம்மை மறந்து உன்னை வியந்து வாழ்த்துகிறோம்'' என்று ஏத்துகிறார் சுந்தரனார்.

அவரது பாடலில் தரவைத் தொடர்ந்து வரும் 'தாழிசை'யில் அரிய கருத்துக்கள் பலவற்றை வடமொழியின் பெருமை பேசும் வாய் புதைக்குமாறு அவர் இயற்றியுள்ளனர்.

அவற்றுள் ஒன்று,

''சதுமறையா ரியம் வருமுன்
சக முழுது நினதாயின்
முதுமொழி நீ அநாதியென
மொழிகுவதும்
வியப்பாமே''

என்பது. நான்கு வேதமுடைய வடமொழி தோன்று முன்னரே -- அன்றைய உலக முழுவதும் பரவி நின்றது தமிழ் எனும்போது -- நீயே பழைய மொழி -- ஆதியற்றது என்று கூறுவது வேண்டாமன்றோ! என்று .வினவுகிறார், இதன்கண்.

அதே நெறியில் நின்று தமிழினது மாட்சியை உலகறியச் செய்த பெருமைக்குரியவர்-- பரிதிமாற்கலைஞர் என்னும் தமிழ்ப் பெயர் பூண்ட சூரிய நாராயண சாஸ்திரியாராவார் 'தமிழ்மொழி வரலாறு என்னும் அரியதொரு நூலினை இயற்றியதன் மூலம் --தமிழின் மேன்மையை மறுப்பவரை எல்லாம் தலைகுனியச் செய்தார்.

''வடமொழி தமிழ்நாட்டில் வெகுநாள் தானும் இயங்கியும் அதற்குத் தமிழ்மொழியைத் தன் வழியில் திருப்பிக் கொள்ளும் ஆற்றல் இல்லாது போயிற்று. வடமொழியாளர்... தமிழரிடத்திருந்த பல அரிய உண்மைக் கருத்துகளையும் (தம் மொழியில்) மொழிபெயர்த்துத் தமிழர் அறியு முன்னரே அவற்றைத் தாம் அறிந்தனர் போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்'' என்று அவர்தம் சூழ்ச்சியைப் புலப் படுத்திய அண்ணல் அவர்.

அவரைத் தொடர்ந்து தமிழ் வீறுகொண்ட அறிஞர் மாகறல் கார்த்திகேயன் என்பார் 'மொழி நூல்' என்னும் ஓர் அரிய ஆராய்ச்சி நூலை வெளியிட்டுத் தமிழ் மாட்சியினை நிலை நிறுத்தினர். அவரது நூல் இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் 1913--ல் வெளிவந்தது.

அதைத் தொடர்ந்து, மும்மொழி வல்லுநர்-- ஆராய்ச்சிவித்தகர் மறைமலை அடிகளார் -- தனித்தமிழ் இயக்கம் கண்டார்கள். வடமொழிச் சொற்கள் ஒன்றும் இடம் பெறாமலே நல்ல தமிழ் நடையை வளர்த்திடலாம் என்பதைத் தமது எழுத்திலும், பேச்சிலும் செயற்படுத்தி--தனித் தமிழ்த் தந்தையாக வலம் வந்தார்கள்,

அதேபோன்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்தந்தை நல்லூர் ஞானப்பிரகாசர்-- உலகெலாம் பரவிய ஒண்டமிழ் மொழியின் வேர்ச் சொற்கள் உலகத்து விளங்கும் மொழிகள் பலவற்றுள்ளும் இன்றும் காணக்கிடக்கின்றன என்பதைத் தமது பன்மொழிப் பயிற்சியாலும் மொழி ஆராய்ச்சித்திறத்தாலும் விளக்கியுள்ளார்கள்.

அந்த வழியில் ஒரு மொழி நூல் ஆராய்ச்சியாளராக விளங்கித் தமிழ் மொழியின் முதன்மையைத் தமது 'ஒப்பியல் மொழி நூல்' மூலம் விளக்கியுரைத்துள்ளார் நமது போற்றுதற்குரிய தனித் தமிழ்க் காவலர் தேவநேயப் பாவாணர் அவர்கள்.

ஆம், இவ்வாறு ஒரு ஆயிரம் ஆண்டுக்காலத்திற்கு மேலாக தமிழ் மொழி பல்லாற்றானும் சிறுமைப்படுத்தப்பட்ட நிலையை--மறுக்கவும் மாற்றவும் அந்நிலையால் விளையும் தாழ்வுமனப்பான்மையை அகற்றவும் -- தன்னம்பிக்கையோடு தமிழினைப் போற்றவும் வழிசெய்யும் வரலாறு, கடந்த 1856-ல் மேல்நாட்டு அறிஞர் டாக்டர் கால்டுவெல் அவர்களால் கால்கோள் நடத்தப்பட்டு இன்றும் தொடர்கிறது. இன்னும் ஒரு நூற்றாண்டு ஒப்பியல் மொழி ஆராய்ச்சி தொடர்ந்து வளரும் காலத்தில்--உலக மொழிகளின் தாய் என்னும் தகுதி தமிழுக்குண்டு என்பதை வடமொழியாளரும் ஏற்றிடும் ஒரு நிலை பிறக்கும் என்று உறுதியாகக் கூறலாம்.

''தமிழர்களுடைய பழமையை நோக்குங்கால், ஆரியருடைய (மொழி, நாகரிக) பழமையானது கணப்பொழுதிற்குமுன் பெற்ற 'ராய்ட்டர்' தந்திச் செய்தியை ஒக்கும்'' என்றார் சென்னை மாநில ஆளுநராகஇருந்த கிராண்டப் எண்ணும் ஆங்கிலேயர்.

இப்படிப்பட்ட தமிழ் உணர்வு தோன்றிய துவக்க நாட்களில் மக்களுக்காகப் பாடிய தேசியக்கவி பாரதியார் -- தாய் மொழியைப் போற்றிப் பாடி எழுச்சி ஊட்டியதும், அவரைத் தொடர்ந்து பாவேந்தர் பாரதிதாசன் -- தமிழ் எழுச்சிப் பண்ணினை நாளும் எழுப்பியதும் எந்நாளும் போற்றி எண்ணப்பட வேண்டுவதாகும். எத்தனையோ வகையில் -- தமிழ் வேட்கை எழுப்பும் பாவேந்தர் பாடியதுஇது;

''கமழுமுன் தமிழினை
உயிரென ஓம்பு
காணும் பிற மொழிகளோ
வெறும் வேம்பு
நமை யெலாம் வடமொழி
தூக்கிடும் தாம்பு
நம்முரிமை தனைக் கடித்தது
அப் பாம்பு

அப்படிப்பட்ட உணர்வே நற்றமிழ் காத்திடும் அருமருந்தாம்!

## எம். ஜி. ஆர் பேச்சுக்கு யாழ்-பல்கலைக் கழக தமிழ் மன்றம் கண்டனம்!

எம். ஜி. ஆர் ஈழத் தமிழர்களை இழிவாகப் பேசியது உலகத் தமிழர்களையே அவமதித்த செயலாகும். இந்த மன்னிக்கமுடியாத தவறு பற்றித் தமிழக மக்கள் நன்குணர்ந்திருப்பார்களா கையால் அதற்கான பரிகாரத்தைத் தேடத்தவறக் கூடாது.

இவ்வாறு -யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ் மன்றச் செயலாளர் திரு. பொ. ஞானசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## சுதந்திரன் போடும் இரட்டை வேடம்!

'1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தேர்ந் தெடுக்கப் பட்ட தலைவனை மட்டுமன்றி ஈழத்தமிழக மக்கள் அனைவரையும் எம் ஜி ஆர் பல இலட்சம் மக்கள்முன்னிலையில் அவமதித்துத் தாக்கியதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை' என்றும் - மதுரை மாநாட்டில் தலைவர் அமிர் பேசிய பேச்சை தலைப்புச் செய்தியாக்கியும் - மற்றவர் பாராட் எழுதிய அறிக்கையை வெளியிட்டும்மகிழ்ந்த சுதந்திரன்-தனது 18-1-81 இதழின் 2ம் பக்கத்தில் 'அண்ணருக்கு நல்ல அடி' என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் தலைவர் அவர்களை ஏளனம் பண்ணி எழுதியிருக்கிறது.

எங்கோ இருக்கின்ற எம் ஜி ஆர் பேசிய பேச்சைவிட சுதந்திரனின் இந்தக்கவிதை யாராலும் தாங்கமுடியாததாகும்.

திரைஉலகில் எம் ஜி ஆர் இரட்டைவேடம் தாங்கியது போல 'சுதந்திரன்' பத்திரிகை உலகில் இரட்டை வேடம் போடுகின்றதா என்று மேற்படிக்கவிதையைப் படித்தவர்கள் கேட்கின்றார்கள்.

*

## தலைவர் அமிர் கலைஞரைச் சந்தித்தார்!

இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் தலைவருமான அமிர் அவர்கள் 16 - 1 - 81ல் கலைஞர் கருணாநிதி அவர்களை சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தில் சந்தித்து உரையாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசதுரைக்கு எம். ஜி. ஆர். சூடு!

அண்மையில் மதுரைமாநகரில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கை அமைச்சர் தி ந.செ. இராசதுரை தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆரிடமிருந்து நன்றாக சூடு வாங்கிக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறார்.

மதுரைப் பல்கலைக்கழக தொல்காப்பியர் அரங்கில் நடைபெற்ற அறிஞர்கள் கருத்தரங்கில் எம். ஜி. ஆர். வாழ்த்துரை வழங்கும் போதே இராசதுரை அவமானப்பட நேர்ந்திருக்கிறது.

அறிஞர்களை எம். ஜி. ஆர் வாழ்த்திப் பேசும் போது தெரிவித்தாவது.

இங்கு பேசிய இலங்கை அமைச்சர் குமரிக் கண்டம் என்று என ஒன்று இருந்தால் கிழவிக்கண்டம் எங்கே என்று கிண்டல் பண்ணிப் பேசினார் குமரிகிழவியானால்தானே பிரச்சனை! கன்னித் தமிழ் என்றும் கன்னியாக இருக்கும் என்று அவருக்குத் திட்டவட்டமாக கூறிக் கொள்கின்றேன்.

இப்படி -- இராசதுரைக்கு சூடுகொடுத்த எம். ஜி. ஆர். தொடர்ந்துபேசுகையில்கூறியதாவது--

தமிழகத்தில் தமிழர்படும் துன்பத்தைப் பெரிதாகப் பேசும் இலங்கை அமைச்சர் (இராசதுரை) இலங்கையில் தமிழர் படும் துன்பங்களை ஏனோ மறந்து விட்டுப் பேசுகின்றார் எனவே இலங்கையில் தமிழர்களின் துயரைப் போக்க நீங்கள் முன்வர வேண்டுமேதவிர இங்கு வந்து புத்திமதி கூறவேண்டிய அவசியமில்லைஎன்றுஅவருக்குக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்''

திரு. இராசதுரை எம். ஜி. ஆரின் நெருங்கிய நண்பரெனக் கருதப்பட்டும் எம்.ஜி. ஆர் அவருக்கு இப்படிக் கூறிதற்கு உள்ளார்ந்த காரணம் ஏதும் இருக்கவேண்டுமென்றே மக்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

யு. என். பி. கட்சியின் கீழ் இலங்கைத்தீவு அடங்கிலும் தமிழர்கள் படும் துன்பத்தை நன்றாக அறிந்திருந்தும் அவை ஏதுவும் நடைபெறாதது போல் தமிழகம் வந்து பூசி மெழுகாமல், முதலில், உங்கள் நாட்டுத் தமிழர்களின் துன்பங்களைத் துடையுங்கள் என்று எம். ஜி. ஆர் இராசதுரைக்கு மறைமுகமாகவே இடித்துரைத்திருக்கிறார் என்றே அவரது பேச்சைப்புரிந்து கொண்டவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

## ஈழத்தமிழரை எம்.ஜி.ஆர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் தமிழக முதல்வர் மீதும், தமிழக அரசு மீதும் கோபங்கொண்டு சிலஎதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றனர். இச்சம்பவங்கள் அத்தனையிலும் நேரடியாக சம்பந்தப்பட்டவனென்ற வகையில் சில விளக்கங்களைக் கொடுப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். 4ம் திகதி ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிமாநாட்டில் ஆரம்ப தினத்தன்று பந்தயத்திடல் மைதானத்தில் நடந்த தொடக்கவிழாவில் நான்உரையாற்றினேன். அந்த உரையின் எந்தக் கட்டத்திலும் தமிழக முதல்வரோ வேறு யாருமோ குறுக்கிட்டு எனது உரையைத் தடுக்கவில்லை. அப்படிக் குறுக்கிட்டதாக வந்த வானொலிச் செய்திபொய்யானது.எந்தெந்தக்கருத்துக்களை அந்தமாநாட்டில் கூறவேண்டுமோ அவற்றையே எடுத்துக் கூறினேன். எனது உரையைக்கேட்ட பலர் தமிழக அமைச்சர்கள் உட்பட அதை மிகவும் பாராட்டினார்கள். அந்தப்பேச்சு ஒலிப்பதிவு நாடாவில் பதியப்பட்டு என் வசம் இருக்கிறது. எனவே வானொலிச் செய்தியின் பொய்யான தன்மையை நிரூபிக்கக் கூடிய நிலையில் நான் இருக்கிறேன்.

தொடக்க விழாவின் இறுதியில் உரையாற்றிய திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சில கருத்துக்களை வெளியிட்டார். எனதுபேச்சையும் குறிப்பிட்டு அவர் அக்கருத்துக்களை வெளியிட்டாலும் அவை பொதுவாக அமைந்திருந்தன. இந்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையிலுள்ள உறவோடு சம்பந்தப்பட்ட பல பிரச்சனைகள் அவர் பேச்சில் அடங்கியிருந்தன. இந்த மாநாட்டை ஒட்டி இந்திய அரசுக்கு கொடுக்கப்பட்ட பல தவறான கருத்துகளுக்கு பதிலளிக்கும் நோக்கமும் தமிழக முதல்வரின் பேச்சில் அடங்கியிருந்தது. அந்தப் பேச்சை என்னை இடைமறித்துப்பேசியதாகவும், இலங்கைப்பிரச்சனைகளைப் பற்றி மட்டுமே பேசியதாகவும், இலங்கை வானொலியும் இல்ங்கைப் பத்திரிகைகளுமே பிரசுரித்தன. தமிழகப் பத்திரிகைகள் எதிலுமே அந்த உருவத்தில் இச்செய்தி பிரசுரிக்கப் படவில்லை. அதே போன்று இரண்டுநாட்கழித்து தொல்காப்பியர் அரங்கில் இலங்கைக் கம்பன்கழகத்தைச் சேர்ந்த குமாரதாசனும்,மலேசிய நாட்டைச் சேர்ந்த ஒரு முதியவரும் பேசிய பேச்சுக்களுக்கும், அமைச்சர் திரு. இராசதுரையின் குமரிக்கண்டம் கிழவிக்கண்டம் பற்றிய பேச்சுக்கும் தமிழக முதல்வர் பதிலளித்துப் பேசினார். தமிழக முதல்வரின்பேச்சில் இலங்கையில் உள்ள நிலைமையையும் அவர் குறிப்பிட்டிருந்தாலும் சிலர் பிரச்சாரம் செய்யும் அளவுக்கு இலங்கைத் தமிழ் மக்களுக்கு விரோதமான ஒரு பேச்சை அவர் நிகழ்த்தியதாக நாம் கொள்வது தவறு. தமிழக அரசியல் கட்சிகளிடையே, தலைவர்களிடையே ஒற்றுமை இல்லை என்று அங்கு பேசியவர்கள் குறிப்பிட்டபோது, அதற்குப் பதிலளித்த தமிழக முதல்வர் உங்கள்நாட்டில் அப்படிப் பிரச்சனைகள் இல்லையா? உங்கள் நாட்டில் முஸ்லிம் தமிழருக்கும், ஏனையோருக்குமிடையே வேற்றுமைகள் இல்லையா? சாதிப்பிரச்சனைகள் இல்லையா? யாழ்ப்பாணத்தில் இப்படியான பிரச்சனைகள் இல்லையா? என்ற கேள்வியை எழுப்பினார். உண்மையில் தமிழகத்துக்குச் சென்று நாம் அங்குள்ளவர்களுக்கு உபதேசம் செய்யும் பாணியில்பேச ஆரம்பித்தால் அதற்கு பதிலளிக்க வேண்டியகடமைதமிழகமுதல்வருக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்வோமானால், அவருடைய பேச்சைப் பற்றி இங்குஏற்பட்டுள்ளது போன்ற ஆத்திரம் ஏற்பட்டிருக்க மாட்டாது.

சுற்றுலா முடிந்து 16ம் திகதி வள்ளுவர்கோட்டத்தில் தமிழக முதல்வருக்குஅளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் அவர் உரையாற்றிய போது மிகக் தெளிவாகக் குறிப்பிட்டார். உலகத்தில் எங்கு வாழ்ந்தாலும் தமிழ் மக்களை நெருக்கமாக இணைத்து ஒரு குறுகிய வட்டத்துள்கொண்டு வருவதே உலகத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கம் என்றும், அதன் மூலமே உலகெங்கும் வாழும் தமிழ்மக்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தமுடியும் என்றும் அவர் கூறினார். 4 ம்திகதி பந்தயத் திடலில் அவர் கூறிய கூற்றுக்கும். 16 ம் திகதி பாராட்டுவிழாவில் அவர் கூறிய கூற்றுக்கும் மிகப்பெரிய வித்தியாசத்தை நாம் கவனிக்கக் கூடியதாக இருந்தது. இதனுடைய அடிப்படையை நாம் ஆராய்வோமானால் மத்திய அரசோடுள்ள உறவு, அதனால் ஏற்படக்கூடிய தாக்கம் இவை தான்தமிழகமுதல்வரை பந்தயத்திடலில் அப்டிப் பேசச் செய்தன என்பதை நாம் புரிந்து கொள்வோம். அதிகாரத்திலிருப்பவர்கள் எதிர்க்கட்சியிலிருப்பவர்களைப்போல பேச முடியாது என்பதையும் அவர் தொல்காப்பியர் அரங்கில் பேசிய போது சுட்டிக் காட்டினார். வள்ளுவர் கோட்டப் பேச்சில் என்னைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டு அவர் உரையாற்றியதைக் கவனித்த நண்பர்கள் பலர் அவர் முந்திய தமது உரைகளால் ஏற்பட்ட தவறான கருத்துக்களைப் போக்கும் முகமாகவே பேசினார் என்பனத உணரக்கூடியதாகஇருந்தது. இந்த நேரத்தில் தமிழகத்தில் வாழுகின்ற நாலரைக் கோடி மக்களினதும் ஆதரவு ஈழத்தமிழ் மக்களுக்கு வேண்டும். அந்தத் தமிழ் மக்களில் கணிசமானஎண்ணிக்கையினர் அனைத்திந்திய அண்ணா தி.மு வையும் அதன் தலைவர் முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களையும் ஆதரித்து நிற்கின்றார்களென்பதையும். நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எந்தத் தப்பபிப்பிராயத்தையும் மனதில்கொண்டு அந்த மக்களுக்கோ, அங்குள்ள தலைவர்களுக்கோ புண்பாடு ஏற்படும் வகையில்ஈழத் தமிழ் மக்களில் எவருமே நடந்துகொள்ளக்கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தை விட்டு நான் புறப்படுமுன் பதினேழாம் திகதி நண்பகல் தமிழக முதல்வரையும், நிதிஅமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையும்,மின்சாரத்துறை அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களையும், அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வின் பொதுச்செயலாளர் ப. உ. கண்முகம் அவர்களையும் தமிழக முதல்வரின் இல்லத்தில் சந்தித்து அவர்களோடு எம் நிலையைப் பற்றி, தமிழக அரசின் நிலையைப்பற்றி தெளிவாகக் கலந்துபேசும் வாய்ப்பைப் பெற்றேன். எனவே எவரும் அவசரப்பட்டு எந்த விதமான முடிவுக்கும் வந்து தமிழக அரசுக்கும், தமிழக அரசை ஆதரிக்கும் மக்களுக்கும், ஈழத்தமிழ்மக்களுக்கும் இடையில் வீணை விரோதங்கள் ஏற்பட வழிவகுக்கக் கூடாது. இப்படியான விரோதங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இலங்கை வானொலியும், அரசின் ஊதுகுழல்களான சில பத்திரிகைகளும் வேண்டுமென்றே திரித்து சில செய்திகளை வெளியிட்டன என்பதை உணர்ந்து ஈழத்தமிழ் மக்களை தமிழக அரசின்மீதோ, தமிழக முதல்வர் திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் மீதோ கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்களைப் போக்கிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ஆராய்ச்சி மா...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையினாலே கண்டிக்கப்படக் கூடிய, சொல்லப்படக்கூடிய நிலைக்கு உள்ளாவார்கள் அல்லது தக்க நேரத்தில் தங்கள் ஆராய்ச்சிக்கட்டுரைகளை அளிக்க முடியாமல் போகும்.

ஒரு வல்லுநர் ஒருஇடத்தில் நடைபெறும் கருத்தரங்கில் லந்து கொண்ட பின்னர் இன்னொரு இடத்தில் நடைபெறும் கருத்தரங்கிற்கு செல்வதற்குள் அந்தக் கருத்தரங்கம் பாதி நடந்து இருக்கும், அல்லது முடிந்து இருக்கும். இதனால் நேரமும் முயற்சியும் விரையம் ஆகிறது.

இதனால் நான் அறிஞர்களை என்னுடைய அறைக்கு மாலை நேரங்களில் அழைத்து சில மிக முக்கியமான விவாதங்களை நடத்தினேன் என்று டாக்டர் கரோசிமா கூறினார்.

யாரைக்குற்றம் சொல்வது? நிச்சயமாக தமிழ் ஆராய்ச்சிக்கான உலக நாடுகள் நிறுவனக்கைத் தான் சொல்ல வேண்டும். அதிலும் அதன் அமைப்புக் குழுவை --- சிறப்பாக அதன் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளைத்தான் குற்றம் சொல்ல வேண்டும் என்கிறார் டாக்டர் கரோசிமா.

அந்தக் குற்றத்திற்கு நானும் மற்ற வெளிநாட்டு பிரதிநிதிகளும் ஆளாகிறோம் ஏனெனில் நாங்களும் அந்த நிறுவனத்தின் உறுப்பினர்கள்.

உலக நாடுகள் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயல் முறைகளை மாற்றவும், அந்த அமைப்பையே மாற்றி அமைக்கவும் இது நேரமாகும் இல்லையென்றால் வேறு அமைப்பை ஏற்படுத்துவது பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டியதாக இருக்கும் என்றார்.

சென்னையில் 1968 ம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டோடு ஒப்பிடுகையில் மதுரை மாநாடு எப்படி இருக்கிறது என்று கேட்டபொழுது ''சென்னையில் நடைபெற்ற மாநாடு நிச்சயமாக சிறப்பானது தான்'' என்றார் டாக்டர் கராசிமா.

டாக்டர் கராசிமாவின் கருத்தை வெளிநாடுகளில் இருந்து வந்த பல அறிஞர்களும் ஏற்றுக் கொண்டனர் இந்த அறிஞர்கள் எல்லாம் தமிழ்மொழி அதன் கலாச்சாரம் அல்லது வரலாறு ஆகியவைகளில் அது ஆய்வு செய்யவும் பயிலவும் வேண்டிய ஒன்று என்ற அளவில் ஆர்வம் மிகுந்தவர்கள்.

சாந்தி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மகத்தான பொங்கல் வெளியீடு
சிவாஜி கணேசன் நடித்த
ராஜராஜ சோழன்
(புத்தம் புதிய பிரதி) (சினிமாஸ்கோப் கலர்)
விரைவில் எதிர்பாருங்கள்!
எஸ். பி. வீரப்பா அளிக்கும்
திசை மாறிய பறவைகள்
(வண்ணச் சித்திரம்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
கடைசி வாரம்!
ஜெய்கணேஷ், சுந்தரராசன், நம்பியார்,
கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீ பிரியா, முத்துராமன்
மற்றும் பலர் நடித்த
சுப்ரபாதம்
(பக்திப் பரவசம் நிறைந்த சித்திரம்)
(ஈஸ்ட்மன் கலர்)

தமிழர் விடுதலைக் கூட்டணிக்காக யாழ்ப்பாணம் கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு, 238, பிரதான வீதியிலிருந்து 23-1-81 வெள்ளிக்கிழமை வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org